உ

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாதேவ்யை நம :

ஸ்ரீ வேதவியாஸ பகவான் அருளிச்செய்த

மார்க்கண்டேய புராணத்திலுள்ள

தேவீமாஹாத்ம்யம்

(மஹாமந்திர சாஸ்திரம்)

பலாசூர் - பண்டித பிரும்மஸ்ரீ
ஸ்ரீமத் நாகேச்வர சாஸ்திரிகளவர்களின்
குமாரரும் சிஷ்யரும்
இதிஹாஸ புராண உபந்யாஸகரும்
சென்னை
அடையாறு லைப்ரரியில் தலைமை ஸம்ஸ்கிருத பண்டிதருமான
நா. இராமநாத சாஸ்திரிகளால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது

காப்பிரைட் ரிஜிஸ்டர்ட் | சென்னை 1932 | விலை அணா 8. தபாற்கூலி வேறு.

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

கும்பகோணம் ஸ்ரீகாஞ்சீ

காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்யாளான

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ

ஸ்வாமிகளவர்களின்

திவ்ய ஸ்ரீ சரணாரவிந்த ஸந்நிதானத்தில்

விசேஷ பக்திச்ரத்தாவிநயங்களோடு

அநந்தகோடி வந்தனங்களுடன்

இந்த க்ரந்தமானது

மொழிபெயர்ப்பாசிரியனால்

ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஆங்கிரஸ நவராத்ரி புண்ய காலம்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

முகவுரை

ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் அருளிச்செய்த மார்க்கண்டேய புராணத்தில் அடங்கியிருப்பது இந்த தேவீ மாஹாத்ம்யம். இதுவே 'சண்டீஸப்தசதீ' யென்று மந்திர சாஸ்திரமாய்ப் பாராயணம் முதலியவைகளால் நன்ருய் உபாஸிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு மந்திரமென்று கூறுகிருர்கள். இதை உபாஸித்தால் நமது இஷ்டகாம்யங்களெல்லாம் உடனே ஸித்தியாகும். இதில் மஹாதேவியானவள் உத்பத்தியாகி அக்காலத்தில் உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்த கொடிய அசுரர்களே வதம் செய்வதும், தேவர்களே அநுக்ரஹிப்பதும், தேவர்கள் வெகுவாய் தேவியை ஸ்தோத்திரம் செய்வதும் தேவர்களுக்குத் தேவி வரங்கொடுப்பதும் நன்ருய் வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. இதன் பெயருக்கேற்றபடி மஹாதேவியின் மஹிமையானது எங்கும் வெகு விரிவாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வித அருமையான புராணத்தை எல்லோரும் படித்துப் பயனடைய வேண்டுமென்று இனிய தமிழ்நடையில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறேன். நமது ஸ்திரீ புருஷர்களனைவரும் இதனை யாராதித்துப் பாராயணம் செய்து மேலான நன்மைகளை யடைவார்களாக.

பலாசூர் - பண்டித - நா. இராமநாதசாஸ்திரி.

விஷயானுக்ரமணிகை

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

ஸ்ரீ வேதவியாஸ பகவான் அருளிச்செய்த

மார்க்கண்டேய புராணத்திலுள்ள

தேவீமாஹாத்ம்யம்

முதலாவது அத்யாயம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்। ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வவிக்நோபசாந்தயே॥

மதுகைடப வதம்

ஸ்ரீ மார்க்கண்டேயர் கூறினார்:—ஸ்ரீஸூர்ய பகவானுடைய பிள்ளையாகிய ஸாவர்ணி என்பவர் எட்டாவது மனுவென்று சொல்லப்படுகிறார். அவரது உத்பத்தியை விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன், கேள். ஸூர்யனுடைய பிள்ளையாயும் மஹா பாக்யசாலியாயுமுள்ள அந்த ஸாவர்ணி என்பவர் மஹாமாயையின் மஹிமையால் அவ்விதம் மந்வந்தரத்திற்கு அதிபதியானார். அது எவ்விதமெனில்,

ஆதிகாலத்தில் ஸ்வாரோசிஷ மந்வந்தரத்தில் சைத்ர வம்சத்திலுண்டான ஸுரதன் என்பவன் ஸகல

பூமண்டலத்திற்கும் அரசனுயிருந்தான். அவன் தன் வயிற்றிற் பிறந்த குழந்தைகளைப்போல் ஜனங்களைப் பரிபாலித்து வரும்போது பிராமணர்களையும் நற்கருமங் களையும் நாசம் செய்யும் மிலேச்சர்களான அரசர்கள் அவனுக்கு சத்ருக்களாயேற்பட்டார்கள். மிகவும் பல முள்ள சத்ருக்களைகூட ஜயிக்கும் சாமர்த்தியமுள்ள அவனுக்கும் அவர்களுக்கும் சண்டை நடந்தது. அந்த சத்ருக்கள் பலத்தில் இவனுக்குக் குறைந்த வர்களாயிருந்தபோதிலும் யுத்தத்தில் இவனை ஜயித்து விட்டார்கள். பிறகு அவன் தமது பட்டணத்திற்கு வந்து தனது தேசத்திற்கு மாத்திரம் அதிபதியானுன். அங்கேயும் மிகவும் பலமுள்ள சத்ருக்களால் ஆக்ர மிக்கப்பட்ட அவ்வரசன் அப்போது மிகவும் பலமுள்ள வர்களாயும் துஷ்டர்களாயுமுள்ள தமது மந்திரிகளா லும் பீடிக்கப்பட்டு பலமற்றவனு யிருக்கும்போது துராத்மாக்களான அம்மந்திரிகள் அவனுடைய சைன் யத்தையும் பொக்கிஷத்தையும் பிடுங்கிக்கொண்டார் கள். பிறகு தனது பட்டணத்திலும் அதிகாரமற்ற அவ்வரசன், வேட்டையாடும் வியாஜத்தால் குதிரை யின் மீதேறிக்கொண்டு ஒருவனுகப் பெருங் காட்டிற் குச் சென்றுன். அவன் அங்கே மிகவும் சாந்தமான பிராணிகள் நிறைந்ததும் முனிவர்களான சிஷ்யர்களால் அலங்கரிக்கப்பட்டதுமான மேதஸ் என்னுமொரு சிரேஷ்டமான பிராம்மணனுடைய ஆச்ரமத்தைக் கண் டான். அந்த முனிவரால் மரியாதை செய்யப்பட்ட அவன் அங்கு கொஞ்சகாலம் தங்கியிருந்தான். அந்த முனிசிரேஷ்டரின் ஆச்ரமத்தில் இங்கு மங்கும் அவன்

சஞ்சரித்துக்கொண்டு அபிமானத்தால் இழுக்கப்பட்ட மனதோடு இவ்வாறு நினைக்க ஆரம்பித்தான். "முன்னுல் என் பெரியோர்களால் நன்கு காப்பாற்றப்பட்ட என் தேசமானது இப்போது நானில்லாததால் கெட்ட நடத்தையுள்ள எனது வேலைக்காரர்களால் நன்கு ரக்ஷிக்கப் படுகின்றதோ இல்லையோ. எப்போதும் மதத்துடன் கூடின எனது முக்கியமான சூரமான பட்டத்து யானையானது எனது சத்துருக்களுக்கு வசமாகி என்ன அசௌக்யங்களை யடைகின்றதோ அறியேன். அனுக்ரஹம் தனம் போஜனம் முதலியவைகளுக்காக என்னை அனுஸரித்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் அந்த அரசர்களை நிச்சயமாய் அனுஸரிப்பார்கள். நான் கஷ்டப்பட்டு சேர்த்துவைத்தபொக்கிஷத்தை நல்லவழியில் செலவு செய்யாமல் எப்போதும் கெட்ட வழியில் அதிகமாய்ச்செலவுசெய்து அவர்கள் நாசமாக்கிவிடுவார்கள்." இதையும் இன்னும் மற்றுமுள்ள விஷயங்களையும் சிந்தித்துக் கொண்டே அவ்வரசன் அந்த முனிவரின் ஆச்ரமத்தின் சமீபத்தில் ஒரு வைச்யனைக் கண்டான். உடனே அவனை 'நீ யார், இங்கு வருவதற்குக் காரணம் என்ன. எதனுல் நீ துக்கமுள்ளவனுயும் மனதில் கஷ்டமுள்ளவனுயும் காணப்படுகின்ருய் ?' என்று கேட்டான். இவ்விதம் அவ்வரசன் பிரியத்தோடு கூறிய வார்த்தையைக்கேட்டு அந்த வைச்யன் மிகவும் வணக்கத்தோடு அவ்வரசனுக்கு பதிலுரைத்தான்.

வைச்யன் கூறினுன் :—நான் ஸமாதி என்று பெயருள்ள வைச்யன் ; நல்ல பணக்காரர்களின் வம்சத்தில் பிறந்தேன். பணத்தாசையால் கெட்டவர்களான எனது

பத்னியும் புத்திரர்களும் என்னைத் துரத்திவிட்டார்கள். கெட்டவர்களான அந்தப் பத்னி புத்திரர்களெல்லாம் எனது பணத்தைப் பிடுங்கிக் கொண்டதால் நான் ஒன்றுமில்லாமல் பிரியமான பந்துக்களாலும் விடப்பட்டு துக்கத்தோடு இந்தக் காட்டிற்கு வந்துவிட்டேன். நான் இங்கிருப்பதால் அந்தப்பெண்டு பிள்ளை பந்துக்கள் முதலியவர்களின் க்ஷேம சமாசாரத்தையோ வேறு விஷயங்களையோ அறிந்து கொள்ள முடியவில்லை. இப்போது அவர்களுக்கு வீட்டில் க்ஷேமமோ இல்லையோ. எனது பிள்ளைகள் இப்போது நல்ல நடத்தையுடைவர்களாயிருக்கிறார்களோ இல்லையோ.

அரசன் கூறினான்:—பேராசையால் உனது பணத்தைப் பிடுங்கிக் கொண்டு உன்னை விரட்டிவிட்ட பெண்டு பிள்ளைகளிடம் உனது மனம் ஏன் இன்னும் ஸ்நேகமுள்ளதாய் இருக்கின்றது?

வைச்யன் சொன்னான்:—நீ என்னைப்பற்றி சொன்னது உண்மைதான். என்னசெய்வேன்? என் மனம் கடினமாய் ஆகவில்லையே. பணத்தின் ஆசையால் தகப்பன் என்றுகூட என்னிடம் ஆசைவைக்காமல் என்னைத் துரத்திவிட்ட பெண்டுபிள்ளைகளிடம் இன்னும் என் மனமானது விச்வாஸமுள்ளதாகவே யிருக்கின்றது. இதற்குக் காரணம் தெரியவில்லை. தெரிந்தாலும் ஸ்நேகம் போகவில்லை. அவர்கள் கெட்டவர்களா யிருந்தாலும் அவர்களிடம் விச்வாஸமும் விருப்பும் ஏற்படுகின்றன. அவர்கள் விஷயத்தில் எனக்குப் பெருமூச்சும் மனதில் கஷ்டமும் ஏற்படுகின்றன. அவர்கள்

பிரியமற்றவர்களா யிருந்தாலும் அவர்களிடம் என் மனம் கொடுமையாய் இல்லையே! என்செய்வேன்?

மார்க்கண்டேயர் கூறினர்:—பிறகு அந்த ராஜ சிரேஷ்டனும் ஸமாதி என்னும் அந்த வைச்யனும் சேர்ந்துகொண்டு அந்த ரிஷியினிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அம்முனிவரால் விதிப்படியும் மரியாதைப்படியும் ஆதரிக்கப் பட்டு அங்கு உட்கார்ந்து கொண்டு அநேகம் கதைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அரசன் சொன்னன்:—பகவானே! நான் தங்களை யொன்று கேட்க விரும்புகிறேன். அதற்கு தயையுடன் பதிலுரைக்க வேண்டும். எனக்கு ராஜ்யம் போய்விட்டாலும் எல்லா ராஜ்யாங்கத்திலும் என்னை யறியாமலே மூடன்போல் எனக்கு அபிமானம் உண்டாகின்றது. ஓ! முனி சிரேஷ்டரே! இதென்ன, ஆச்சரியம்! அப்படியே இவனும் தனது பெண்டு பிள்ளைகளாலும் வேலைக்காரராலும் இஷ்டபந்துக்களாலும் அவமதிக்கப் பட்டு துரத்தப்பட்டான். அப்படியிருந்தாலும் இவன் அவர்களிடம் மிகவும் ஸ்நேகமுள்ளவனுயிருக்கின்றன். இவ்விதம் இவனும் நானும் தோஷம் நிறைந்த விஷயத்திலும் பூர்ணமான அபிமானத்தால் மிகவும் துக்கமுள்ளவர்களாகவே யிருக்கின்றோம். எங்களுக்கு அறிவிருந்தபோதிலும் இவ்விதம் அஞ்ஞானம் எப்படியுண்டாகின்றது? நானும்இவனும் விவேகமில்லாமல் மூடர்களாகிவிட்டோம். மஹா மஹிமையுள்ள மஹானே இதற்குக் காரணம் யாது?

மகர்ஷி கூறினர்:—மஹா பாக்யவானே! உலக விஷயங்களில் ஸகல ஜந்துக்களுக்கும் ஞானமிருக்கின்

றது. விஷயங்களும் தனித்தனியாய் மேன்மேலும் வந்துகொண்டிருக்கின்றன. சில பிராணிகள் பகலில் குருடாயிருக்கின்றன; சில இரவில் குருடுகள். சில பிராணிகள் இரவும் பகலும் நன்ருய்ப் பார்க்கக்கூடிய திருஷ்டியுடையவை. உண்மையாய் மனிதர்கள் ஞான முள்ளவர்கள். ஆனால் அவர்கள் மாத்திரம் அல்ல. பசு பக்ஷி மிருகம் முதலியவைகளும் ஞானமுள்ளவைகள் தான். மனிதரும் அறிவுள்ளவர்களே. மனிதருக்கும் அவைகளுக்கும் மற்றவையெல்லாம் ஸமானமானவை.

பக்ஷிகளைப்பார். அவைகளுக்கு அறிவிருந்தாலும் தாங்கள் பசியினல் வருந்திஞலும் குஞ்சுகளின் வாயில் தீனியைக் கொண்டுவந்து கொடுக்கின்றன. மானிட சிரேஷ்டனே! மனிதர்களைப் பார். அவர்களும் பிள்ளை களிடம் விசுவாஸமுள்ளவர்கள். ஆனால் பதிலுக்கு உப காரத்தையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்ருர் கள். இது உனக்குத் தெரியாதா. இவ்விதமிருந்தாலும் இந்த அபிமானத்தால் மோஹமாகிய பெரும் சுழலுள்ள பள்ளத்தில் தள்ளப்படுகின்ருர்கள். இது சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவைகளைச்செய்கின்ற மஹா மாயை யின் மஹிமை. இவ்விஷயத்தில் ஆச்சரியப்பட வேண் டாமப்பா. இது ஸர்வேச்வரனுடைய யோக நித்திரை. இது அவருடைய மஹாமாயை. இதனுல் உலகம் முழு வதும் மோகத்தை யடைகின்றது. மஹா மாயை யாகிய அந்த தேவியானவள் அறிவுள்ளவர்க ளின் மனதையும் பலாத்காரமாய் இழுத்து மோக மடையும்படி செய்கிருள். ஸ்தாவர ஜங்கமமான இவ் வுலகம் அந்த தேவியால் சிருஷ்டிக்கப் படுகிறது.

அனுக்ரகம் வந்துவிட்டால் அவள் மனிதர்களுக்கு வரங்களையும் மோக்ஷத்தையும் கொடுக்கின்றாள். பிராசீனமான வித்தையாகிய அவள் மோக்ஷத்திற்கு முதற் காரணமாவாள். ஈச்வரியாகிய அவள் ஸர்வேச்வரனுக்கும் பிறப்பு இறப்பு ஆகிய இந்த ஸம்ஸார பந்தத்திற்கு மூலகாரணம்.

அரசன் கூறினான் :—ஹே ! பகவானாகிய மஹாரிஷியே! தாங்கள் மகாமாயையென்று சொல்லும் அந்த தேவியானவள் யார்? அவள் எவ்வாறு உண்டானாள்? அவளுடைய கார்யமென்ன? அவளுடைய ஸ்வபாவம் எப்படிப்பட்டது? ஸ்வரூபம் எப்படிப்பட்டது? எங்கிருந்து எப்படி உண்டானாள்? பிரும்மத்தை யறிந்தவர்களுக்குள் சிரேஷ்டமானவரே! தங்களிடமிருந்து இவையெல்லாம் கேட்க விரும்புகிறேன்.

மகர்ஷி கூறினார் :— உலகங்களை சரீரமாய் உடைய அவள் நித்தியமானவள். அவளால் இவையெல்லாம் வியாபிக்கப்பட் டிருக்கின்றன. அப்படியிருந்தாலும் அவளுடைய உத்பத்தியானது அநேக விதமானது. நான் சொல்லுகிறேன், கேள்.

நித்யையாயிருந்தாலும் அவள் தேவர்களின் கார்யசித்திக்காக எப்போது அவதரிக்கிறாளோ அப்போது உலகத்தில் உத்பத்தியானவளென்று சொல்லப்படுகிறாள். பிரளய காலத்தில் உலகெலாம் ஒரே ஜல மயமானதும் பிரபுவாயும் பகவானுயு மிருக்கிற விஷ்ணுவானவர் ஆதிசேஷனைப் படுக்கையாய் விரித்துக்கொண்டு அதன்மேல் படுத்துக்கொண்டு யோகநித்திரை யடைந்துவிட்டார். அப்போது விஷ்ணுவின்

காதுகுறும்பியிலுண்டான பயங்கரமான மது, கைடபன் என்று பிரசித்தமான இரண்டு அசுரர்கள்தோன்றி பிரும்மாவைக் கொல்லவந்தார்கள். விஷ்ணுவின் நாபி கமலத்திலிருந்த பிரம்மாவானவர் குரூரமான அவர்களையும் விஷ்ணு தூங்கிக்கொண்டிருப்பதையும் பார்த்து ஒரே ஸ்திரமுள்ள மனதுடன்கூட விஷ்ணுவின் நேத்திரத்தை யாச்ரயித்திருக்கிறவளும் உலகங்களுக் கெல்லாம் மாதாவாயும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் இவைகளைச்செய்கிறவளாயும் இருக்கிற யோக நித்திரையை அவர் விழித்துக் கொள்ளுவதற்காக ஸ்தோத்திரம் செய்தார். அந்த விஷ்ணுவின் நித்திரையானது பகவத் ஸ்வரூபமாயும் தேஜஸ்ஸுகளுக் கெல்லாம் பிரபுவாயுமுள்ளது.

பிரும்மா கூறினர் :—நீயே ஸ்வாஹா. நீயே ஸ்வதா. நீயே வஷட்காரம். நீயே ஸ்வரரூபமாயுள்ளவள். நீயே அமிர்தம். நீயே குறைவற்றவள் ; நித்தியமானவள். மூன்றுவிதமாய் மாத்ரா ரூபமா யிருக்கின்றவள். அர்த்த மாத்ரையாயும் நித்யையாயும் இருக்கின்ருய். அது விசேஷமாய் உச்சரிக்க முடியாதது. நீயே இந்த உலகங்களை யுண்டாக்கிறவள். ஏ தேவி! நீயே மேலான தாய். இவ்வுலகம் உன்னுலேயே உண்டாக்கப்படுகிறது. உன்னுலேயே ரக்ஷிக்கப்படுகின்றது. உன்னுலேயே தரிக்கப் படுகின்றது. கடைசியில் உன்னுலேயே ஸம்ஹாரம் செய்யப்படுகின்றது. உலக ரூபமானவளே! இவ்வுலகங்களை சிருஷ்டிக்கும் போது நீ சிருஷ்டி ரூபமாயிருக்கிருய். ரக்ஷிக்கும்போது ஸ்திதி ரூபமாயிருக்கின்ருய். முடிவில் ஸம்ஹார ரூபமாயிருக்

கின்ருய். நீதான்மஹாவித்தை, மகாமாயை, மகாபுத்தி ஸ்வரூபமானவள். மஹாஸ்மிருதி, மஹா மோஹரூப மானவள். மகாதேவி, மகாசுரரூபிணி. நீயே மூன்று குணங்களின் மஹிமையுடன் எல்லாவற்றிற்கும் பிர கிருதியாயிருக்கின்ருய். ஸகல கஷ்டங்களையும்போக்கு கின்ற நீயே காளராத்திரி யென்றும் மஹாராத்திரி யென்றும் பயங்கரமான மோஹராத்திரி யென்றும் ஸாதாரண ராத்திரி யென்றும் சொல்லப்படுகின்ருய். நீயே லக்ஷ்மி. நீயே ஈச்வரீ. நீயே ஹ்ரீ. நீயே அறிவை யுண்டாக்குகிற புத்தி. நீயே லஜ்ஜை, புஷ்டி, துஷ்டி, சாந்தி, பொறுமை. நீயே கத்தியையுடையவள், சூலத் தை யுடைவள், பயங்கரமானவள். அப்படியே கதா என்னும் ஆயுதமுடையவள் சக்ரத்தை யுடையவள், சுங்கத்தை யுடையவள், வில்லை யுடையவள், பாணம் முசுண்டி பரிகம் முதலிய ஆயுதங்களை யுடையவள். நீயே நல்லவள். எல்லா நல்லவைகளைக்காட்டிலும் மிக வும் நல்லவள். மிகவும் அழகுள்ளவள். சிரேஷ்டமான பதார்த்தங்களுக் கெல்லாம் மிகவும் சிரேஷ்டமானவள் நீயே பரமேச்வரீ. சகல பிரபஞ்ச ரூபமானவளே! எங்கும் நல்லது கெட்டதான எந்த வஸ்து காணப்பட் டாலும் அதற்கெல்லாம் எந்த சக்தியுண்டோ அந்த சக்தியாகவே நீ இருக்கின்ருய். அப்போது உன்னைப் பற்றி என்ன ஸ்தோத்திரம் செய்வது? இவ்வுலகத்தை சிருஷ்டிக்கின்றவராயும் ரக்ஷிக்கிறவராயும் ஸம்ஹாரம் செய்கிறவராயுமுள்ள இவரும் நித்திரையின் வசம் அடைந்துவிட்டார். இப்போது உன்னை ஸ்தோத் திரம்செய்ய யாரால் முடியும்? விஷ்ணுவும் நானும் சிவ

னும் உன்னாலேயே சரீரங்களை யெடுக்கும்படி செய்யப்பட்ட படியால் உன்னை ஸ்தோத்திரம் செய்ய யாருக்கு சக்தியுண்டு. ஏ தேவி! இவ்வளவு மகிமையுள்ள தேவர்களால் இவ்விதம் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட நீ அடக்கமுடியாத இந்த மது கைடபன் என்னும் அசுரர்களை மோகப்படுத்த வேண்டும். லோகநாதனாகிய ஸ்ரீ விஷ்ணுவும் சீக்கிரம் விழிப்பை யடையட்டும். இந்த மகா அசுரர்களைக் கொல்லுவதற்கு அவரும் ஸித்தமாயிருக்க வேண்டும்.

மகர்ஷி சொன்னார்:—அப்போது இவ்விதம் பிரம்மாவினால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட தமோ குணமான அந்ததேவியானவள் மதுகைடபர்களைக்கொல்லுவதற்காகவும் விஷ்ணு விழித்துக் கொள்ளுவதற்காகவும் அவருடைய கண்கள் முகம் மூக்கு கைகள் ஹிருதயம் மார்பு முதலிய இடங்களி லிருந்து வெளிப்பட்டு ஸ்வயம்புவான அந்த பிரம்மாவினுடைய எதிரில் வந்து நின்றாள். அவளால் விடப்பட்ட லோகநாயகனாகிய ஜநார்த்தனரும் எங்கும் ஒரே ஜலமயமா யிருக்கும்போது அதன் மத்தியிலுள்ள படுக்கையிலிருந்து எழுந்து அதிகமான பராக்ரமத்தை யுடைய துஷ்டர்களான அந்த மது கைடபன் என்னும் அசுரர்களைப் பார்த்தார். அவர்கள் பிரம்மாவைக் கொல்லுவதற்குப் பெரும் முயற்சி செய்துகொண்டு கோபத்தால் சிவந்த கண்களையுடையர்களாகவிருந்தார்கள்.

பிறகு மகாவிஷ்ணுவானவர் எழுந்திருந்து, வெரும் கைகளையே ஆயுதமாய் அடைந்து அவர்களுடன் ஐயாயிரம் வருஷம் சண்டைசெய்தார். அவர்களும் மிகுந்த

பலத்தால் கொழுப்படைந்து மகாமாயையால் மோஹிக்கப்பட்டு 'நம்மிடம் நீர் வரங்கேளும்' என்று மஹாவிஷ்ணுவிடம் கூறினார்கள்.

ஸ்ரீ பகவான் கூறினார் :—என்னிடம் ஸந்தோஷமடைந்த நீங்கள் என்னிடமிருந்து வதத்தை யடையுங்கள். இப்போது எனக்கு வேறு வரம் எதற்கு? இதுவே தான் எனக்கு வரம்.

மகர்ஷி கூறினார் :—இவ்விதம் அப்போது வஞ்சிக்கப்பட்ட அவர்கள் உலகமெல்லாம் ஜலமாயிருப்பதைப் பார்த்து பகவானிடம் பின்வருமாறு தெரிவித்துக் கொண்டார்கள்:—'ஜலத்தால் வியாபிக்கப்படாத பூமியில் எங்களை நீர் கொல்லவேண்டும்.'

மகர்ஷி கூறினார் :—சங்கு சக்கிரம் கதை இவைகளைத் தரிக்கும் பகவான் அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டு சக்கிராயுதத்தினால் அவர்களின் தலைகளையறுத்துத் தனது மடியில் தள்ளினார்.

இவ்விதம் பிரம்மாவினால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டு இவள் தானாகவே யுண்டானாள். இந்த தேவியின் மகிமையை மறுபடியும் சொல்லுகிறேன், கேள்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

இரண்டாவது அத்யாயம்

மகிஷாசுர ஸைன்ய வதம்

மகர்ஷி கூறினார் :— ஆதிகாலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நூறு வருஷம் முடிய பெரும் சண்டை நடந்தது. அப்போது தேவர்களுக்கு இந்திரன் அதிபதி. அசுரர்களுக்கு மஹிஷாசுரன் அதிபதி. மகாபராக்கிரமசாலிகளான அசுரர்கள் தேவர்களையெல்லாம் ஜயித்துவிட்டதும் மகிஷாசுரன் இந்திரனான். பிறகு முறியடிக்கப்பட்ட தேவர்கள் தாமரைப் பூவிலிருந்துண்டான பிரும்மாவை முன்னிட்டுக்கொண்டு பரமசிவனும் மஹாவிஷ்ணுவும் இருக்கும் இடம் சென்று மகிஷாசுரனுடைய சேஷ்டையை அவர்களிடம் உள்ளபடி சொன்னார்கள். அப்படியே தேவர்களை அவன் அவமானப்படுத்துவதையும், சூரியன் இந்திரன் அக்னி வாயு சந்திரன் யமன் வருணன் இன்னும் மற்றுமுள்ள தேவர்களின் அதிகாரத்தை அவன் தானே பிடுங்கிக்கொண்டு நடத்துகிறான் என்றும் தேவர்களின் அவமானத்தையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார்கள். 'தேவர்களெல்லாம் அந்த மஹிஷாசுரனால் சுவர்க்கத்திலிருந்து பூமியில் விரட்டப்பட்டு மனிதர்களுக்கும் கீழ்ப்பட்டவர்களாய்ச் சஞ்சரிக்கின்றார்கள். இவ்விதம் அசுரர்களின் சேஷ்டைகளைத் தங்களிடம் தெரிவித்துக் கொண்டோம்.

தங்களைச் சரணம் அடைந்தோம். அவனை வதம்செய்யும் உபாயத்தை யாலோசிக்கவேண்டும்.'

இவ்விதம் பரமசிவனும் மகாவிஷ்ணுவும் அந்த தேவர்களின் வார்த்தையைக் கேட்டு புருவ நெறியினால் ஜ்வலிக்கின்ற முகமுடையவர்களாகி அதிக கோபங் கொண்டார்கள். பிறகு அதிக கோபமடைந்த மஹாவிஷ்ணு பிரும்மா பரமசிவன் இவர்களுடைய முகங்களிலிருந்தும் மற்ற இந்திரன் முதலிய தேவர்களுடைய சரீரங்களிலிருந்தும் ஒரு பெரிய தேஜஸானது வெளிக் கிளம்பிற்று. இவ்விதம் வெளிக்கிளம்பின அது உடனே ஒன்றாக ஆகிவிட்டது. மிகவும் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற மலையைப் போல் திக்குகளையெல்லாம் வியாபித்துக்கொண்டிருந்த அந்த தேஜஸ் அங்குள்ள தேவர்களெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தேவர்களின் சரீரங்களிலிருந்துண்டான (அந்த ஒளியானது) தனது காந்தியால் உலகெல்லாம் வியாபித்துக்கொண்டு ஒரு ஸ்திரீயாயிற்று. சிவனுடைய தேஜஸால் அதற்கு முகம் உண்டாயிற்று. யமனுடைய தேஜஸினால் மயிர்கள் உண்டாயின. விஷ்ணுவின் ஒளியால் கைகள் உண்டாயின. சந்திரனுடைய தேஜஸால் இரண்டு ஸ்தனங்களும் உண்டாயின. இந்திரனுடையதால் இடுப்புண்டாயிற்று. வருணனுடையதால் முழங்காலும் துடைகளும், பூமியினுடையதால் இடுப்பும், பிரம்மாவினுடையதால் பாதங்களும், சூரியனுடையதால் கால்விரல்களும் வஸுக்களுடையதால் கைவிரல்களும், குபேரனுடையதால் மூக்கும், பிரஜாபதியினுடையதால் பற்களும், அக்னியி

னுடையதால் மூன்று நேத்திரங்களும் இரண்டு சந்தியா காலங்களின் தேஜஸினுல் இரண்டு புருவங்களும், காற்றினுடையதால் காதுகளும் உண்டாயின. இவ்விதம் சகல தேவர்களின்கூட்டத்தின் தேஜஸால் உண்டான அந்தத் தேவியைப்பார்த்து மகிஷாசுரனுல் பீடிக்கப்பட்ட தேவர்களெல்லாரும் அதிக சந்தோஷம் அடைந்தார்கள். பரமசிவன் தனது சூலத்திலிருந்து இழுத்து சூலத்தை அவளுக்குக் கொடுத்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் தனது சக்ராயுதத்திலிருந்து உண்டாக்கி சக்கரத்தை அவளுக்குக் கொடுத்தார். அவளுக்கு வருணன் சங்கத்தையும், அப்படியே அக்னி சக்தியென்னும் ஆயுதத்தையும், வாயுபகவான் வில்லையும், அப்படியே பாணங்கள் நிறைந்த இரண்டு அம்பராத்தூணிகளையுங் கொடுத்தார்கள்.

தேவர்களுக்கு அதிபதியான இந்திரன் தனது வஜ்ராயுதத்திலிருந்து உண்டாக்கி வஜ்ராயுதத்தையும், ஐராவதத்திலிருந்து மணியையும், யமன் தனது காலதண்டத்திலிருந்து தண்டத்தையும், சமுத்திரராஜன் பாசாயுதத்தையும், பிரஜாபதியானவர் ஜபமாலையையும், பிரம்மாவானவர் கமண்டலுவையும், சூரியன் மயிர்க்கால் முழுதும் தனது கிரணங்களையும், காலன் கத்தியையும் சுத்தமான கவசத்தையும், க்ஷீர ஸமுத்திரன் சுத்தமான ஹாரத்தையும், தெய்விகமான இரண்டு வஸ்திரங்களையும், அப்படியே திவ்யமான சூடாமணியையும், இரண்டு குண்டலங்களையும், தோள்வளைகளையும், அர்த்தசந்திரம் என்னும் ஆபரணத்தையும், அப்படியே ஸகல கைகளிலும்

திவ்யமான வளையல்களையும், சுத்தமான தண்டைகளையும், அப்படியே மேலான ஹாரத்தையும், கைவிரல்களிலெல்லாம் சிரேஷ்டமான ரத்தினங்களிழைத்த மோதிரங்களையும், அப்படியே விச்வகர்மாவானவன் அவளுக்கு மிகவும் சுத்தமான பாசுவென்னும் ஆயுதத்தையும், அநேகவிதமான அஸ்திரங்களையும், அவ்விதமே பிளக்கமுடியாத கவசத்தையும் கொடுத்தார்கள். இவ்வாறே சமுத்திரராஜன் அவளது மார்பில் வாடாத தாமரைப்பூக்களையுடைய மாலையையும், தலையில் மற்றொரு மாலையையும், தோள்வளைகளையும் மிகவும் சுபகரமான தாமரைப் புஷபங்களையும் கொடுத்தார்கள். இன்னும் ஹிமவான் ஸிம்ம வாகனத்தையும் அநேகவிதரத்தினங்களையும் குபேரன் சாராயம் நிறைந்த குடிக்கிற பாத்திரத்தையும் கொடுத்தார்கள். ஸகல ஸர்ப்பங்களுக்கு அதிபதியான, இந்த பூமியைத் தாங்குகிற ஆதிசேஷன் மகாரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸர்ப்பஹாரத்தைக் கொடுத்தான். இவ்விதம் மற்ற தேவதைகளால் ஆயுதங்களாலும் ஆபரணங்களாலும் மரியாதை செய்யப்பட்ட தேவியானவள் அட்டஹாஸத்தோடு இரைந்து அடிக்கடி கர்ஜித்தாள். இப்படி பயங்கரமான அவளுடைய கர்ஜனையால் ஆகாசம் முழுவதும் நிரம்பியது. அந்தப்பெரும் சப்தத்தால் பெரிய எதிரொலி யுண்டாயிற்று. உலகங்களெல்லாம் நடுங்கின. ஸமுத்திரங்களும் கலங்கின. பூமி நடுங்கிற்று. எல்லா கடல்களும் நடுங்கின. ஸகலமான பர்வதங்களும் நடுங்கின. சிம்மத்தை வாகனமாயுடைய அந்த தேவியை தேவர்களெல்லாம் 'ஜய, விஜயீ ::வ' வென்று

ஸ்தோத்திரம் செய்தார்கள். ஸமஸ்தமான ரிஷிகளும் மிகுந்த பக்தியால் வணங்கி ஸ்தோத்திரம் செய்தார்கள். மூன்று உலகங்களும் இப்படி கலக்க மடைந்ததைப் பார்த்து தேவர்களின் சத்துருவான அசுரர்கள் தங்களது சேனைகளையெல்லாம் தயார் செய்துகொண்டு சண்டைக்காகப் புறப்பட்டார்கள். உடனே மகிஷாசுரன் ஆஹா! இதென்னவென்று கத்திவிட்டு ஸமஸ்தமான அசுரர்களாலும் சூழப்பட்டு அந்தசப்தம்உண்டான இடத்தைக் குறித்து ஓடிவந்தான். அப்போது அவ்விடத்தில் தனது காந்தியால் மூன்று உலகங்களையும் வியாபித்துக் கொண்டவளாயும் கால் அடிவைப்பதால் பூமிவணங்குவதாயும் கிரீடத்தினல் ஆகாசத்தை யளாவியவளாயும் வில்லிலுள்ள நாண்கயிற்றின் சப்தத்தால் பாதாளம்முழுவதையும் கலக்கியவளாயும் தனது ஆயிரம்புஜங்களால் திக்குகளையெல்லாம் நான்குபக்கங்களிலும் வியாபித்துக் கொண்டிருக்கிறவளாயும் இருக்கிற மகாதேவியைக் கண்டான். உடனே தேவிக்கும் தேவர்களின் சத்ருவான அசுரர்களுக்கும் யுத்தம் உண்டாகி விருத்தியடைந்தது. அநேகவிதமாய் விடப்பட்ட சஸ்திரங்களாலும் அஸ்திரங்களாலும் திக்குகளெல்லாம் பற்றிஎரிந்தன. மகிஷாசுரனுடைய ஸேனதிபதியான சிக்ஷுரன் என்னும் மகா அசுரனனவன் ரதம் கஜம் குதிரை காலாள் என்னும் சதுரங்க பலத்தோடு கூட தேவர்களோடு சண்டையிட்டான். உதக்ரன் என்னும் மகா அசுரன் அறுபதினயிரம் தேர்களோடு சண்டை செய்தான். மஹாஹனு என்பவன் ஆயிரம் பதினயிரம் ரதங்களோடும் அஸிலோமா என்னும் பெரிய

அசுரன் ஐம்பது லக்ஷம் ரதங்களாலும் பாஷ்களன் என்பவன் அறுபது லக்ஷம் ரதங்களாலும் இன்னும் ஆயிரம் லக்ஷக் கணக்கான யானை குதிரைகளுடன் சூழப்பட்டவர்களாகவும் அப்படியே கோடி ரதங்களுடன் கூடியவர்களாயும் சண்டை செய்தார்கள். அப்போது பிடாலன் என்னும் மகாஅசுரன் ஐம்பதாயிரம் ரதங்களாலும் ஆயுதங்களாலும் சூழப்பட்டு அந்த யுத்தத்தில் சண்டை செய்தான். இன்னும் அநேக மகா அசுரர்கள் அப்போது பதினாயிரக் கணக்கான ரதங்களோடும் யானைகளோடும் குதிரைகளோடும் கூடியவர்களாக மஹாதேவியோடு சண்டை செய்தார்கள். அங்கு மகிஷாசுரன் ஆயிரமாயிரம் கோடிக் கணக்கான ரதங்கள் யானைகள் குதிரைகள் இவைகளால் சூழப்பட்டு சண்டைக்கு வந்தான். சண்டையில் வீரர்கள் தோமரங்களாலும் பிந்திபாலங்களாலும் சக்தி யாயுதங்களாலும் உலக்கைகளாலும் கத்திகளாலும்கோடரிகளாலும் பட்டஸமென்னும் ஆயுதங்களாலும் தேவியோடு சண்டைசெய்தார்கள். சிலர் சக்தியாயுதங்களைத் தேவியின் மீதெறிந்தார்கள். சிலர் பாசாயுதங்களையெறிந்தார்கள். சிலர் தேவியைக் கத்தியினால் வெட்டிக் கொல்ல ஆரம்பித்தார்கள்.

அந்த சண்டிகாதேவியும் தனது அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் வர்ஷித்து, அவர்களின் அஸ்திரங்களையும் ஆயுதங்களையும் விளையாட்டாகவே அறுத்துவிட்டாள். தேவர்களாலும் மகர்ஷிகளாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவளாயும் முகத்தில் கொஞ்சமும் சிரமத்தை யடையாதவளாயும் லோகமாதாவாயுமுள்ள

ஈச்வரீயானவள் அசுரர்களின் சரீரங்களில் அஸ்திரங் களையும் ஆயுதங்களையும் பிரயோகித்தாள். தேவியின் வாகனமாயிருந்த அந்தசிம்மமும் கோபமடைந்து சடை களை உதறிக்கொண்டு காடுகளில் அக்னி சஞ்சரிப்பது போல் அசுரர்களின் ஸேனைகளில் சஞ்சரித்துக்கொண் டிருந்தது. அம்பிகையானவள் யுத்தத்தில்விட்ட பெரு மூச்சுகளெல்லாம் நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக் காயுமுள்ள தேவகணங்களாயின. அவர்கள் தேவியின் சக்தியால் விருத்தி செய்யப்பட்டு கோடரிகளாலும் பிண்டிபாலங்களாலும் கத்திகளாலும் பட்டிசங்களா லும் அசுர சைன்யங்களை நாசஞ் செய்துகொண்டு சண்டை செய்தார்கள்.

அந்த சண்டையாகிய மஹோத்ஸவத்தில் அந்த கணங்கள் படகங்களையும் சங்கங்களையும் சிலர் மிரு தங்கங்களையும் வாசித்தார்கள். பிறகு தேவியானவள் திரிசூலத்தாலும் கதையாயுதத்தாலும் சக்தி ஆயுதங் களை வர்ஷிப்பதாலும் கத்தி முதலிய ஆயுதங்களாலும் பெரும் அசுரர்களை நூற்றுக்கணக்காயும் ஆயிரக் கணக்காயும் ஸம்ஹாரம் செய்தாள். சில அசுரர்களை மணியின் சப்தத்தால் மோஹித்து பூமியில் விழச் செய்து பிறகு பாசாயுதத்தால் கட்டி இழுத்தாள். சிலரைக் கத்தியால் வெட்டித் துண்டு துண்டாகச் செய்தாள். இன்னும் சிலரைக் கதையினுல் பிளந்து பூமியில் மடியச் செய்தாள். உலக்கையால் அடிக் கும்போது சிலர் ரத்தத்தைக் கக்கினுர்கள். சிலரை சூலத்தால் மார்பில் அடித்துப் பூமியில் தள்ளினுள். யுத்த பூமியில் பாண வர்ஷத்தால் சிலர் மூச்சு

விடாதபடி செய்யப்பட்டார்கள். சிலர் தேவர்களால் அடிக்கப்பட்டு பிராணன்களை விட்டார்கள். சில அசுரர்கள் தலையரியப்பட்டவர்களாயும் கழுத்துப் போனவர்களாயும் யுத்த பூமியில் கீழே விழுந்தார்கள். சிலர் இடுப்பொடிந்து விழுந்தார்கள். வேறு சில மகா அசுரர்கள் முழங்காலொடிந்து பூமியில் விழுந்தார்கள். தேவியால் இரண்டாகப் பிளக்கப்பட்ட சிலர் ஒரு கை ஒரு கண் ஒரு கால் இவைகளோடிருந்தார்கள். தேவியால் தலையறுக்கப்பட்ட போதிலும் கீழே விழுந்து மறுபடியும் எழுந்திருந்த உடல்கள் மாத்திரம் கைகளில் மேலான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு தேவியோடு சண்டையிட்டன. இவ்விதம் தலையறுபட்ட தேகங்கள் கைகளில் கத்தி, சக்தி, தடி முதலிய ஆயுதங்களோடு நான்காவது லயத்தை ஆச்ரயித்து அங்கு நர்த்தனம் செய்தன. இன்னும் வேறு சில அசுரர்கள் நில், நில், என்று சொல்லிக்கொண்டு தேவியை நோக்கி ஓடி வந்தார்கள். கீழே தள்ளப்பட்ட மகா அசுரர்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் தேர்களாலும் அந்த யுத்த பூமியானது நடமாடமுடியாததாய் ஆகிவிட்டது. உடனே ரத்தப் பிரவாஹத்தால் மஹா நதிகள் ஓட ஆரம்பித்தன. யானை குதிரை மகா அசுரர்கள் நிறைந்த பெரும் சேனையின் நடுவில் அப்போது அம்பிகையானவள் ஸஞ்சரித்து அஸுரர்களின் அந்த மகா சேனையை மரம் புல் நிறைந்த காட்டை நெருப்பு போல் ஒரு க்ஷணத்திற்குள் நாசம் செய்துவிட்டாள்.

அந்தச் சிம்மமும் வெகுவாய்க் கர்ஜித்துக்கொண்டு சடைகளை உதறிக்கொண்டு தேவர்களின் சத்ருவான

அசுரர்களின் சரீரங்களிலிருந்து பிராணன்களைத் தேடுவது போல் சுற்றி வந்தது. அவ்விடத்தில் தேவியின் கணங்களும் அசுரர்களோடு மிகவும் சண்டை செய்தார்கள். அதைக் கண்டு தேவர்களும் வெகுவாய்ச் சந்தோஷித்து ஆகாயத்திலிருந்து ஏராளமாய்ப் புஷ்பங்களை வர்ஷித்தார்கள்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

மூன்றாவது அத்தியாயம்

மகிஷாசுர வதம்

மஹர்ஷி கூறினார்:—இவ்வாறு இந்த சைன்யம் நாசமானதைக்கண்டு சிக்ஷுரன் என்னும் சேனாதிபதியானவன் அதிக கோபங்கொண்டு அம்பாளோடு சண்டைக்குச் சென்றான். அந்த அசுரன் மேரு பர்வதத்தின் சிகரத்தில் மேகமானது ஜலத்தை வர்ஷிப்பதுபோல சண்டையில் பாணமழையால் அம்பாள்மீது வர்ஷித்தான். உடனே தேவியானவள், அவனது பாண வர்ஷங்களை விளையாட்டாகவே அடக்கிவிட்டுத் தனது பாணங்களால் அவனது குதிரைகளையும் ரதம் ஓட்டுகிறவனையும் வெட்டி விட்டாள். அவனது வில்லையும் மிகவும் உயர்ந்த கொடியையும் அறுத்து அவனது அவயவங்களிலும் பாணங்களால் அடித்தாள். அந்த அசுரன் வில்லு அறுபட்டும் தேர் குதிரைகள் சாரதி இவை கொல்லப்பட்டாலும் வெறுங் கத்தியையுங் கவசத்தையும் தரித்துக்கொண்டு தேவியை நோக்கி எதிர்த்து ஓடி வந்தான். கருக்கான முனையையுடைய கத்தியால் சிம்மத்தைத் தலையில் அடித்துவிட்டு அதிக வேகத்தோடு தேவியையும் இடது தோளில் அடித்தான். ஹே அரசனே! அந்தக் கத்தி தேவியையடைந்து ஒடிந்து விட்டது. பிறகு கோபத்தால் சிவந்த கண்களோடு அவன் சூலத்தையெடுத்து மகா வேகத்தோடு பத்ரகாளியின்மேல் எறிந்தான். அந்த சூலமானது காந்தியால் பிரகாசித்துக்கொண்டு ஆகாசத்தி

விருந்து சூரியன் விழுவதுபோல் விழுந்தது. உடனே தேவியானவள் அந்த சூலம் விழுவதைப் பார்த்து தனது சூலத்தை விட்டெறிந்தாள். அதனால் அந்த சூலமும் அந்த மகா அசுரனும் தூள் தூளானார்கள். இவ்வாறு இந்த மகிஷாசுரனுடைய மகா பராக்கிரமசாலியான சேனாதிபதியானவன் கொல்லப்பட்டதும் தேவர்களை ஹிம்சிக்கும் சாமரன் என்பவன் யானையின் மீதேறிக்கொண்டு யுத்தத்திற்கு வந்தான். அவனும் தேவியின்மீது சக்தியாயுதத்தை எறிந்தான். உடனே தேவியானவள் கோபத்தோடு ஹூம்காரம் செய்து, அதை முறித்து காந்தியற்றதாய் பூமியில் தள்ளிவிட்டாள். சக்தி ஒடிந்து போனதைப் பார்த்த அந்த சாமரன் அதிக கோபத்தோடு சூலத்தை எறிந்தான். அம்பாள் பாணங்களால் அதையும் ஒடித்துவிட்டாள். பிறகு சிம்மமானது உயரக் கிளம்பி யானையின் மண்டையின் நடுவிலிருந்துகொண்டு தேவர்களின்சத்ருவான அந்த அசுரனோடு பலமாய் கைச்சண்டை செய்தது. பிறகு அவர்கள் சண்டைசெய்துகொண்டே அந்த யானையிலிருந்து கீழே இறங்கி அதிக கோபத்தோடு மிகவும் பயங்கரமாய் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டு சண்டை செய்தார்கள்.

பிறகு சிம்மமானது அதிவேகத்தோடு உயரக் கிளம்பி அவன்மீது விழுந்து கையாலடித்து அவன் தலையைப் பிடுங்கி விட்டது. பிறகு உதக்ரன் என்பவன் தேவியினால் கல்மழையால் கொல்லப்பட்டான். காராளனென்பவனும் கோரப்பற்களால் கடித்தும் கைகளால் அடித்தும் கொல்லப்பட்டான். தேவியானவள் அதி

கோபமடைந்து கதையினால் அடித்து உத்ததன் என்பவனைப் பொடியாக்கிவிட்டாள். பாஷ்கலன் என்பவனைப் பிண்டி பாலத்தாலும், அப்படியே தாம்ரன் என்பவனையும், அந்தகன் என்பவனையும், உக்ராஸ்யன் என்பவனையும், உக்ரவீர்யன் என்பவனையும், மகாஹனு என்பவனையும், பாணங்களால் அடித்துக்கொன்றாள். த்ரிசூலன் என்பவனைத் திரிசூலத்தால் கொன்றாள். பரமேச்வரியானவள் தனது கத்தியினால் பிடாலாஸ்யன் (பூனைமுகமுடையவன்) என்பவனுடைய சரீரத்திலிருந்து தலையையறுத்துத் தள்ளினாள். துர்த்தரன் துர்முகன் என்னும் இருவரையும் பாணங்களால் யமலோகத்திற்கனுப்பிவிட்டாள். இவ்விதம் தனது சேனையானது நாசமடைவதைப்பார்த்து மகிஷாசுரன் தனது எருமைக்கடா ரூபத்தோடு அந்த கணங்களைப்பயமுறுத்தினான். சிலரைத் தலையால் முட்டியும், மற்றவர்களைக் குளம்பினால் உதைத்தும், சிலரை வாலினால் அடித்தும், வேறு சிலரைக் கொம்புகளினால் பிளந்தும், இன்னும் சிலரை அதிக வேகத்தோடு சுத்திகொண்டு எதிர்த்து ஓடியும், மற்றவர்களைத் தனது சப்தத்தால் பயமுறுத்தியும், இன்னும் சிலரைத் தனது கோரமான பெருமூச்சினாலும் பூமியில் தள்ளிவிட்டான். பிரமத கணங்களின் சேனையைக் கிழே தள்ளிவிட்டு மஹா தேவியின் வாகனமான அந்த சிம்மத்தைக் கொல்ல எதிர்த்து ஓடி வந்தான். உடனே அம்பிகையானவள் அதிக கோபங் கொண்டாள். மகா பராக்ரமசாலியாகிய அந்த மகிஷாசுரனும் அதிக கோபங் கொண்டு தனது குளம்புகளால் பூமியைப் பொடி செய்து கொம்புகளால் உயர்ந்த மலைகளையெல்லாம் கீழே தள்ளிவிட்டு

அதிகமாய்க் கர்ஜனை செய்தான். அவன் வேகமாய் சுற்றுவதால் பூமி நடுநடுங்கி பொடிப் பொடியாயிற்று. வாலினால் அடிக்கப்பட்ட சமுத்திரம் நாலா பக்கங்களி லும் பொங்கிவந்தது. கொம்புகளை இங்கு மங்கும் ஆட்டுவதால் மேகங்கள் துண்டு துண்டாயின. மூச்சுக் காற்றினால் அடிக்கப்பட்ட மலைகள் நூற்றுக் கணக்காய் ஆகாயத்திலிருந்து கீழேவிழுந்தன. இவ்விதம் கோபத் தோடு எதிர்த்து வருகிற அந்த அசுரனைக் கொல்லு வதற்காக சண்டிகா தேவியானவள் மிகவும் கோப மடைந்தாள். அவள் அவனிடமிருந்த பாசத்தைப் பிடுங்கி அதனால் அவனை நன்கு கட்டினாள். உடனே அவன் அந்தச் சண்டையில் தனது எருமைக்கடா ரூபத்தை விட்டு சிம்மமாக ஆனான். அம்பாள் அவ னது தலையை வெட்டவே, உடனே கையில் கத்தி யுடன் ஒரு புருஷன் ஆனான். அப்போதே தேவி அவனை அவனது கத்தியோடும் கேடயத்தோடும் பாணங் களால் வெட்டினாள். அவன் உடனே ஒரு பெரும் யானை யானான். தனது தும்பிக்கையால் தேவியின் வாஹன மான அந்த சிம்மத்தைப் பிடித்து இழுத்து வெகு கம் பீரமாய்க் கர்ஜித்தான். தேவியானவள் அவனது துதிக் கையைக் கத்தியால் வெட்டினாள். பிறகு அந்தப் பெரும் அசுரன் மறுபடியும் எருமைக்கடா ரூபத்தையெடுத்துக் கொண்டு ஸ்தாவரஜங்கமமான மூன்று உலகங்களையும் முன்போற் கலக்கினான். உடனே லோகமாதவான சண் டிகாதேவியானவள் அதிகோபமடைந்து சிரேஷ்டமான மதுவைக்குடித்து அதனால் சிவந்த கண்களோடு அடிக் கடி இரைந்து சிரித்தாள். அந்த மகா அசுரனும் பராக் கிரமத்தாலும் பலத்தாலும் கொழுப்பாலும் அதிக

கர்வமடைந்து தனது கொம்புகளால் தேவியின்பேரில் மலைகளை வாரியெறிந்தான். தேவியானவள் அவன் எறிந்த மலைகளைத் தனது பாணக் கூட்டங்களால் பொடிப்பொடியாக்கி மிகுந்த கௌரவத்தோடு அவனைக் குறித்துச் சொன்னாள்.

தேவீ கூறினாள் :—ஏ, மூடனே! கொஞ்சநேரம் கர்ஜித்துக்கொண்டிரு. அதற்குள் நான் மதுபானம் செய்துவிட்டு வருகின்றேன். உடனே நான் உன்னைக் கொன்றுவிட்டால் மூன்று உலகங்களும் கர்ஜிக்கும்.

மஹர்ஷி சொன்னார் :—இவ்வாறு சொல்லிவிட்டு மகாதேவியானவள் துள்ளிக்குதித்து அந்த அசுரன் மீதேறிக்கொண்டு அவனது கழுத்தைக் காலால் மிதித்துக்கொண்டு சூலத்தால் அவனையடித்தாள். பிறகு அவளால் காலால் மிதிக்கப்பட்ட அவன் தனது முகத்தோடு பாதி வெளியே வந்தும் தேவியின் பராக்கிரமத்தால் நன்றாய்க் கட்டுப்பட்டவனாக, அப்படியே சண்டை செய்து அவன் தேவியால் பெருங் கத்தியினால் தலையை வெட்டிக் கீழே தள்ளப்பட்டான். உடனே அந்த அசுரசைன்யம் ஹா ஹா வென்று கதறிக் கொண்டு கீழே விழுந்து நசித்து விட்டது. ஸகலமான தேவ கணங்களும் அளவற்ற ஸந்தோஷம் அடைந்தார்கள். அவர்கள் எல்லாரும் ஒன்றாய்க் கூடி மஹரிஷிகளும் ஒன்று சேர்ந்து அம்பாளை ஸ்தோத்திரம் செய்தார்கள். கந்தர்வசிரேஷ்டரெல்லாம் நன்றாய்க் கானம் செய்தார்கள். அப்ஸர ஸ்திரீகளெல்லாம் கூட்டங் கூட்டமாய் நர்த்தனஞ் செய்தார்கள்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

நான்காவது அத்தியாயம்

இந்திராதி தேவர்களின் ஸ்தோத்திரம்

மஹர்ஷி கூறினார்:—மஹா தேவியினால் மகா பராக்ரமசாலியாயும் துராத்மாவாயுமிருந்த அந்த மஹிஷாசுரனும் அவனது சேனைகளும் கொல்லப் பட்டவுடன் இந்திரன் முதலான தேவர்களெல்லாம் நமஸ்காரம் செய்து அப்போது வணங்கிய தலை தோள் முதலிய அவயவங்களோடும் அதிக சந்தோஷத்தா லுண்டான மயிர்க் கூச்சலினால் அழகுள்ள சரீரங் களோடும் தமது திவ்ய வாக்குகளால் மஹாதேவி யை ஸ்தோத்திரம் செய்தார்கள். ஸமஸ்தமான தேவர் களின் கூட்டத்தின் சக்தியின் சமூகமாகிய சரீரத்தை யுடைய எந்த தேவியால் தனது சக்தியால் இவ்வுலகம் வியாபிக்கப் பட்டிருக்கின்றதோ, அவ்விதமானவும் ஸகலதேவர்களாலும் மஹரிஷிகளாலும் பூஜிக்கப்பட்ட வளாயும் இருக்கிற அம்பிகையை பக்தியுடன் நமஸ் கரிக்கின்றோம். அவள் நமக்கு க்ஷேமங்களை யுண்டுபண் ணட்டும். எவளுடைய மேலான மகிமையையும் பலத் தையும் பகவத் ஸ்வரூபமான பிரம்மா விஷ்ணு சிவன் இவர்களும் எடுத்துரைப்பதற்குச் சக்தி யற்றவர் களோ, அப்படிப்பட்ட சண்டிகாதேவியானவள் ஸகல லோகங்களையும் பரிபாலனம் செய்வதற்காகவும் நமது அசுபங்களின் கூட்டங்களை நாசம் செய்வதற்காக

வும் பெரிய மனது செய்யட்டும். ஏ மஹா தேவி! புண்யசாலிகளின் வீடுகளில் லக்ஷ்மியாகவும், பாபிகளின் வீடுகளில் அலக்ஷ்மியாகவும், நல்ல புத்தி சாலிகளின் மனதில் புத்தி ரூபமாயும் நல்லவர் களிடம் சிரத்தையாகவும் குலஸ்திரீகளிடம் லஜ்ஜை யாகவும் இருக்கிற உன்னை எப்போதும் நமஸ்கரித் துக் கொண்டிருக்கிறோம். நீ உலகங்களை ரக்ஷிக்கவேண் டும். மனோவாக்குகளுக்கெட்டாத உனது இந்த ரூபத்தை எப்படி வர்ணிப்போம்? மேலும் இந்த ரூப மானது அளவற்ற பராக்ரமத்தையுடையதாயும் ஏராள மான அசுரர்களை நாசம் செய்யக்கூடியதாயும் இருக் கிறதல்லவா? மேலும், ஏ அம்மா! ஸகலமான தேவாசுர யுத்தங்களில் உனது ஆச்சரியகரமான ஸஞ்சாரத் தை எப்படி வர்ணிப்போம்? ஸகல லோகங்களுக் கும் காரணமாயும் மூன்று குணங்களையுடையவளாயும் அபாரமான மகிமையையுடையவளாயும் இருக்கிற நீ மகாவிஷ்ணு பரமசிவன் முதலிய தேவர்களாலும் அறி யப்படுவதில்லை. ஹே அம்மா! நீ எல்லாவற்றிற்கும் ஆச்ரயம். மேலானவள்; விகார மற்றவள். ஆதி யிலுண்டான பிரகிருதி நீயே. நீ இல்லாவிட்டால் உலக மெல்லாம் சூன்யமானதே. ஹே தேவி! ஸகலமான யாகங்களிலும் உன்னை ஸ்தோத்திரம் செய்வதால் எல்லா தேவதைகளின் கூட்டமும் திருப்தியடைந்து விடுகின்றது. நீ பித்ருக் கூட்டங்களுக்குத் திருப்தி யை யுண்டாக்குகிற ஸ்வாஹா தேவியாய் இருக்கிறாய். ஆகையாலேயே நீ ஜனங்களால் ஸ்வதாவென்றும்சொல் லப்படுகின்றாய். மோக்ஷத்திற்குக் காரணமாயும் மனோ

வாக்குகளுக்கெட்டாத மஹிமையையுடைய எந்ததேவி யானவள் இந்திரியங்களை மிகவுமடக்கியவர்களாயும் ஸாரமான தத்துவத்தை யறிந்தவர்களாயும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களாயும் ஸகல தோஷங்களும் நீங்கியவர்களாயும் இருக்கின்ற முனிவர்களால் வித்தையென்று அப்யாஸம் செய்யப் படுகிருளோ அப்படிப் பட்ட பகவத்ஸ்வரூபமுள்ள மஹா தேவியானவள் மிகவும் சிரேஷ்டமாய் விளங்குகின்ருள். இந்த தேவியானவள் சப்தஸ்வரூபமாக விருந்துகொண்டு மிகவும் சுத்தமான ருக்வேதங்களுக்கும் யஜுர் வேதங்களுக்கும் அப்படியே உத்கீதம் அழகிய பதபாடம் இவைகளையுடைய ஸாமவேதங்களுக்கும் புதையலாயிருக்கிருள். ஆதலால் மூன்று வேதஸ்வரூபமாயும் ஸம்ஸாரக் கடலையழிக்கின்ற பகவத்ஸ்வரூபிணியாயும் ஸர்வ லோகங்களுக்கும் மேலான ஆபத்துக்களையும் போக்கி யோகக்ஷேமரூபமாயும் பிரகாசித்துக் கொண்டிருக்கிருள். ஏ தேவி! ஸமஸ்த சாஸ்திரங்களின் ஸாரத்தையும் அறியக்கூடிய மேதாரூபமாய் இருக்கின்ருய். தாண்ட முடியாத ஸம்ஸாரக்கடலுக்குப் படகாயும் ஒன்றிலும் ஸம்பந்தமற்றவளாயும் துர்க்கையாயும் இருக்கின்ருய். மஹாவிஷ்ணுவின் ஹிதயத்தில் எப்போதும் வாசம்செய்யும் மஹாலக்ஷ்மியாயும் பரமேச்வரனிடம் ஸ்திரமாயிருக்கும் கௌரியாயும் இருக்கின்ருய். கொஞ்சம் புன்சிரிப்போடு கூடியதாயும் மிகவும் நிறைந்த சந்திரபிம்பத்திற்கொப்பானதாயும் மேலான தங்கத்தின் காந்தியுடையதாயும் அதிக அழகுடையதாயும் உள்ள உனது முகத்தைப் பார்த்தும் மகிஷா

சுரன் கோபத்தோடு அடிக்கடி அடித்தான் என்பது மிகவும் ஆச்சரியகரமானதல்லவா? ஹே தேவி! கோபமடைந்ததாயும் புருவநெறிகளால் பயங்கரமாயும் உதயமாகிற சந்திரனுக் கொப்பான காந்தியையுடைய தாயுமிருக்கிற முகத்தைப் பார்த்தும் மகிஷாசுரன் உடனே பிராணங்களை விடவில்லையே. அது மிகவும் ஆச்சரியமானது. கோபமடைந்த யமனைப் பார்த்துங் கூட எவர்கள் ஜீவித்திருப்பார்கள்? ஹே தேவி! அனுக்கிரஹம் செய்யவேண்டும். மேலான நீ கோபமடைந்து விட்டால் குலங்களை யெல்லாம் நாசமாக்கி விடுகிறாய். இது இப்போதே தெரிந்தது. ஏனெனில் மகிஷாசுரனுடைய பலமுள்ள பெரும் சேனையெல்லாம் ஒரு க்ஷணத்திற்குள் அடியோடு நாசமாயிற்றே.

எவர்களிடம் நீ தயையுடன் இருகின்றாயோ, உலகில் அவர்களே ஸகலருக்கும் இஷ்டமானவர்கள். அவர்களுக்கே செல்வமும் மேலான புகழும் உண்டாகின்றன. அவர்களுக்கு ஒருகாலும் தர்மம் முதலியவை குறைபடுகிறதில்லை. அவர்களே சிரேஷ்டமானவர்கள். அவர்களுக்கே பெண்டு பிள்ளைகள் சேவகர்கள் முதலானவர்கள் ஸ்திரமாயிருக்கிறார்கள். அவர்களுக்கே எப்போதும் மேன்மேலும் க்ஷேமமுண்டாகின்றது. ஏ தேவி! உலகிற் புண்யவான் எப்போதும் தர்மமான கர்மங்களை யாதரவோடு தினந்தோறும் செய்கின்றான். பிறகு ஸ்வர்க்கத்திற்கும் போகின்றான். ஆகையால் நீ தான் அனுக்கிரஹத்தோடு மூன்று உலகங்களிலும் பலன்களைக் கொடுக்கின்றவள். ஹே துர்க்கே! உன்னை ஸ்மரித்த உடனேயே ஸர்வ பிராணிகளின் துக்

கங்களையெல்லாம் அடியோடு நிவர்த்திசெய்து விடுகின்ருய். சுகமாயிருக்கிறவர்கள் உன்னை ஸ்மரித்தால் அவர்களுக்கு மிகவும் நல்ல புத்தியைக் கொடுக்கின்ருய். ஏழ்மைத்தனத்தால் ஏற்பட்ட துக்கத்தையும் ஜனனமரண ரூபமான ஸம்ஸாரத்தையும் போக்குகின்ற அம்மா! எல்லாருக்கும் உபகாரம் செய்வதற்கு உன்னைத் தவிர வேறு யார் தயை நிறைந்த மனமுடையவர்கள்? ஹே தேவி! இவர்கள் கொல்லப்பட்டால் உலகம் க்ஷேமமடைகின்றது. அப்படியே இவர்கள் நரகத்தையடைய வெகு காலம் பாபம் செய்துகொண்டே வரட்டும். யுத்தத்தில் இவர்கள் மரணத்தையடைந்து விட்டால் பிறகு ஸ்வர்க்கத்தையடையட்டும் என்ற எண்ணத்துடனேயே நீ சத்ருக்களைக் கொல்லுகின்ருய். ஏ தேவி! நீ ஸகல அசுரர்களையும் பார்த்தவுடனேயே சாம்பலாய்ப் பண்ண மாட்டாயா! ஆகிலும் சத்துருக்களிடம் ஆயுதங்களை நீ பிரயோகம் செய்வது எதற்காக வென்ருல், அவர்கள் சத்ருக்களானுலும் பாணங்களால் பரிசுத்தர்களாகி மேலான லோகங்களுக்குச் செல்லட்டும் என்று தானே! ஆகவே, இவ்விதம் அவர்களிடமும் உனக்கு மிகவும் நல்ல எண்ணமே உண்டாகின்றது. குரூரமான கத்திகளில் ஜ்வலிக்கின்ற காந்திகளாலும் அப்படியே சூலங்களின் நுனியிலுள்ள பளபளப்பான காந்திகளாலும் அசுரர்களின் கண்கள் நாசமடையாமலிருந்ததானது காந்தியையுடைய சந்திரனுடைய துண்டையுடைய உனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததிஞலேயேதான். ஏ தேவி! உனது ஸ்வபாவமானது கெட்டவர்களின் நடத்தையைக் கண்டிக்

கக்கூடியது. இந்த ரூபமும் மற்றவர்களால் ஆலோசிக்க முடியாததாயும் உபமான மற்றதாயுமுள்ளது. உனது பராக்ரமும் தேவர்களின் பலத்தை யபஹரித்தவர்களைக் கொல்லக்கூடியது. இம்மாதிரி சத்ருக்களிடத்திலும் தயையானது உன்னால் காண்பிக்கப்படுகிறது.

வரங்களைக் கொடுக்கின்ற ஏ தேவி! உன்னுடைய இந்த பராக்ரமத்திற்கு எத்துடன் உபமானம் ஏற்படும். சத்துருக்களுக்குப் பயத்தை யுண்டாக்கக் கூடியவும் மிகவும் மனோஹரமாயுமுள்ள உனதுரூபந்தான் எங்கே? மனதில் தயையும் சண்டையில் குரூரமா யிருப்பதும் மூன்று உலகங்களிலும் உன்னிடமே காணப்படுகின்றது. ஸமஸ்தமான இம்மூன்று உலகங்களும் சத்ருக்களை நாசம் செய்து உன்னால் காப்பாற்றப்பட்டன. ரணகளத்தில் சத்ருக்கூட்டங்களும் உன்னால் கொன்று ஸ்வர்க்கம் அடைவிக்கப்பட்டன. நமக்கும் மதோன்மத்தமான அசுரர்களிடமிருந்துண்டான பயமும்போக்கடிக்கப்பட்டது. உனக்கு நமஸ்காரம். ஹே தேவி! சூலத்தால் எங்களைக் காப்பாற்றவேண்டும். ஏ அம்பிகே! கத்தியால் எங்களை ரக்ஷிக்கவேண்டும். மணியின் சப்தத்தால் எங்களை ரக்ஷிக்கவேண்டும். வில்லின் நாண் கயிற்றின் சப்தத்தாலும் ரக்ஷிக்கவேண்டும். ஏ சண்டிகே! கிழக்கிலும் மேற்கிலும் அவ்விதமே தெற்கிலும் தனது சூலத்தைச் சுற்றுவதால் வடக்கிலும் ரக்ஷிக்கவேண்டும். ஏ ஈச்வரி மூன்று உலகிலும் சஞ்சரிக்கின்ற உனது சௌம்யமானரூபத்தாலும் அப்படியே மிகவும் பயங்கரமான ரூபத்தாலும் பூலோகத்தையும் எங்களையும் எப்போதும் ரக்ஷிக்கவேண்டும். ஹே அம்

பிகே! உனது கரகமலத்திலுள்ள கத்தி சூலம் கதை முதலான அஸ்திரங்களாலும் எங்களை எவ்விடத்தி லும் ரக்ஷிக்கவேண்டும்.

மஹர்ஷி சொன்னார் :—இவ்விதம் ஸகல தேவர் களாலும் பக்தியுடன் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட வளாயும், நந்தன வனத்திலுண்டான திவ்ய புஷ்பங் களால் பூஜிக்கப் பட்டவளாயும் அவ்விதமே திவ்ய சந்தனத்தால் பூசப்பட்டவளாயும், திவ்யமான தூபத் தால் தூபம்போடப் பட்டவளாயும், இருக்கிற லோக மாதாவான தேவியானவள் வணங்கின ஸகல தேவர் களையும் குறித்து அநுக்ரஹத்தால் குளிர்ந்த முகத் தோடு இவ்விதம் சொன்னாள்.

தேவி சொன்னாள்:—ஸமஸ்த தேவர்களே! இஷ்ட மான வரங்களை நம்மிடமிருந்து கேளுங்கள். இந்த ஸ்தோத்திரங்களால் நன்கு பூஜிக்கப்பட்ட நான் மிக வும் பிரியத்தோடு அந்த வரங்களைக் கொடுக்கின் றேன்.

தேவர்கள் சொன்னார்கள் :—பகவத் ஸ்வரூப முள்ள நீ எல்லாவற்றையும் செய்தாகி விட்டது; ஒன்றும் பாக்கியில்லை. நமது சத்ருவான மஹிஷா சுரன் கொல்லப்பட்டதே மேலான வரம். ஏ மஹேச் வரி! இன்னும் வரங்கொடுப்பதனால் எங்களுக்கு ஆபத்துநேரிடும்போது நாங்கள்உன்னைஸ்மரித்தவுடன் நீ ப்ரத்யக்ஷமாகி எங்களது பெரும் ஆபத்துகளை நீக்க வேண்டும். அழகிய காந்தியுள்ள முகமுடையவளே! இந்த ஸ்தோத்திரங்களால் எந்த மனிதன் உன்னை ஸ்தோத்திரம் செய்கின்றானோ அவனுக்கு நீ எப்போ

னும் பிரசன்னமாகி ஏராளமாய் விருத்தியடைந்த ஐச்வர்யங்களாலும் பாக்யம் பத்னி முதலிய விருத்தியாலும் அனுக்கிரஹம் செய்ய வேண்டும்.

மகர்ஷி கூறினார்:—உலகங்களுக்காகவும் தங்களுக்காகவும் தேவர்களால் இவ்விதம் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட பத்திரகாளியானவள் அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டு, ஏ அரசே! மறைந்து விட்டாள். இந்த தேவியானவள் ஆதியில் எவ்வாறு உத்பத்தியானாளோ அது உனக்கு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டது. அதாவது மூன்று உலகங்களின் க்ஷேமத்திற்காக தேவியானவள் தேவர்களின் சரீரங்களிலிருந்துண்டானாள். மறுபடியும் துஷ்ட அசுரர்களையும் அப்படியே சும்பன் நிசும்பன் என்னும் இருவரையும் கொல்லுவதற்காகவும் உலகங்களைக் காப்பாற்றுவதற்காகவும் தேவதைகளுக்கு உபகாரம் செய்வதற்காகவும் கௌரியின் சரீரத்திலிருந்து எவ்விதம் உண்டானாளோ அதை உள்ளபடி விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன். கேள்.

நான்காவது அத்யாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

ஐந்தாவது அத்யாயம்

தூத ஸம்வாதம்

மஹர்ஷி கூறினர்:—ஆதிகாலத்தில் சும்பன் நிசும்பன் என்னும் இரண்டு அசுரர்கள் கொழுப்பின் பலத்தை ஆச்ரயித்துக்கொண்டு இந்திரனுடைய மூவ்வுலக ராஜ்யத்தையும் யஜ்ஞபாகங்களையும் அபஹரித்துக் கொண்டார்கள். அவ்விருவர்களே சூரியன் சந்திரன் குபேரன் யமன் வருணன் வாயு அக்னி இவர்களுடைய அதிகாரங்களைச் செலுத்தி வந்தார்கள். பிறகு தேவர்கள் எல்லோரும் தங்கள் அதிகாரம்போய் ராஜ்யத்தை இழந்து அவமானமடைந்து இவ்விருவராலும் வெருட்டப்பட்டார்கள். பிறகு 'உங்களுக்கு ஆபத்து வரும்போது என்னை ஸ்மரித்தால் நான் உத்பத்தியாகி உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று தேவி வரங்கொடுத்ததை நினைத்துக்கொண்டு தேவர்களெல்லாம் பர்வத சிரேஷ்டமான ஹிமாலயத்தை யடைந்து அங்குள்ள விஷ்ணு மாயையான தேவியை ஸ்தோத்திரம் செய்தார்கள்.

தேவர்கள் கூறினர்கள்:—தேவியாயும் மஹா தேவியாயும் மங்களகாரியாயும் பிரகிருதியாயும் பத்ரையாயும் உள்ள உன்னை நிச்சயமாய் எப்போதும் நமஸ்கரிக்கின்றோம். ரௌத்ரையாயும் நித்யையாயும் லோகமாதாவாயும் கௌரியாயும் சந்திரிகையாயும் சந்திரனும் சுகரூபமாயும் கல்யாணியாயும் நமஸ்கரிக்கின்றவர்

களுக்குசகலவிருத்திகளையும்சித்திகளையும்உண்டாக்கு கிறவளாயும் நிர்ருதி ரூபமாயும் ராஜர்களுக்கு லக்ஷ்மியாயும் சர்வாணியாயும் துர்க்கையாயும் கஷ்டங்களை நிவர்த்திக்கிறவளாயும் ஸாரமாயும் எல்லாவற்றையும் செய்கிறவளாயும் க்யாதிரூபமாயும் அப்படியே கிருஷ்ணையாயும் புகைவர்ணமாயும் மிகவும் சாந்தையாயும் மிகவும் குரூரமுள்ளவளாயும் உலகங்களுக்கெல்லாம் ஆதாரமாயுமிருக்கிற மஹாதேவிக்கு எப்போதும் அளவற்ற நமஸ்காரம். ஸகல பூதங்களிலும் எந்த தேவியானவள் விஷ்ணுமாயை என்றும் சேதனம் என்றும் சொல்லப்படுகிறாளோ அவளுக்கு அளவற்ற நமஸ்காரம். ஸகல பூதங்களிலும் எந்த தேவியானவள் புத்தி ரூபமாயும், பசிரூபமாயும், நிழல் ரூபமாயும், சக்தி ரூபமாயும், தாக ரூபமாயும், பொறுமை ரூபமாயும், ஜாதி ரூபமாயும், லஜ்ஜா ரூபமாயும், சாந்தி ரூபமாயும், ச்ரத்தா ரூபமாயும், காந்தி ரூபமாயும், லக்ஷ்மீ ரூபமாயும், ஜீவன ரூபமாயும், ஞாபக ரூபமாயும், தயா ரூபமாயும், சந்தோஷ ரூபமாயும், தாயார் ரூபமாயும், சந்தேகரூபமாயும், ஸகல பூதங்களின் இந்திரியங்களை வியாபித்துக்கொண்டிருக்கிறவளாயும், அதனால் வியாப்தி தேவியென்று சொல்லப்படுகிறவளாயும், சகலமான இவ்வுலகை வியாபித்துக்கொண்டிருக்கும் ஞான ரூபமாயும் இருக்கிறாளோ அவளுக்கு எப்போதும் அளவற்ற நமஸ்காரம். நமது இஷ்டங்களுக்கெல்லாம் ஆச்ரயமாயும் சுபங்களுக்கெல்லாம் காரணமாயும் ஆதியில் தேவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவளாயும் அப்படியே தேவேந்திரனால் தினந்தோறும் ஸேவிக்கப்பட்ட

வளாயும் இருக்கிற ஈச்வரியானவள் நமக்குக்ஷேமங்களை எப்போதும் உண்டுபண்ணட்டும். ஆபத்துக்களையும் நாசம்செய்யட்டும். எந்ததேவியானவள்இப்போதுகர்வமடைந்த அசுரர்களால் பீடிக்கப்பட்ட தேவர்களான நம்மால் நமஸ்கரிக்கப் படுகிறுளோ, நினைத்த மாத்திரத்திலேயே எவள், பக்தியால் நன்கு வணங்கிய சரீரமுடைய நம்து ஆபத்துக்களை யெல்லாம் அடியோடு போக்கடித்துக் காப்பாற்றுகிறுளோ அவளுக்கு நமஸ்காரம்.

மகர்ஷி சோன்னுர்:—ஏ அரசே! இவ்விதம் தேவர்கள் ஸ்தோத்திரம் செய்ததைக் கேட்டு அங்கு கங்கா நதியின் ஜலத்தில் ஸ்நானம் செய்ய பார்வதி வந்தாள். ஸ்வர்ண காந்தியுடைய அவள் தேவர்களிடம் 'நீங்கள் யாரை இங்கு ஸ்தோத்திரம் செய்கிறீர்கள்' என்று கேட்டாள். உடனே இவளது சரீர கோசத்திலிருந்துண்டான சிவா என்பவள் பதில் சொன்னுள்.

'சும்பன் என்னும் அசுரனுல் பீடிக்கப்பட்டு யுத்தத்தில் நிசும்பன் என்னும் அசுரனுல் முறியடிக்கப்பட்ட ஸகலமான தேவர்களும் சேர்ந்து என்னை ஸ்தோத்திரம் செய்கிருர்கள்'. அந்தப் பார்வதியின் சரீரகோசத்திலிருந்து அம்பிகை வெளிப்பட்டதால் எல்லா உலகங்களிலும் கௌசிகியென்று பிரஸித்தமானுள். அவள் வெளிப்பட்டதும் அந்தப் பார்வதி கறுப்பாய் ஆகிவிட்டாள். அதனுல் காளிகையென்று பிரஸித்தமாகி ஹிமாலய பர்வதத்தில் வஸிக்க ஆரம்பித்தாள்.

பிறகு மிகவும் அழகிய ரூபத்தைத் தரித்துக் கொண்டிருந்த அம்பிகையை சும்பன் நிசும்பன் இவர்

களின் வேலைக்காரரான சண்டனும் முண்டனும் பார்த்தார்கள். அவர்கள் சும்பனிடம் சென்று ஏ மஹாராஜனே ! யாரோ ஒரு அழகிய ஸ்திரீயிருக்கிருள். அவள் தனது அழகால் ஹிமாலயமலையை மிகவும் பிரகாசிக்கும்படி செய்கிருள். அவ்வித உத்தமமான ரூபத்தை ஒருவரும் இதுவரை பார்த்ததில்லை. அவள் தேவஸ்திரீயாவென்றறியப்படட்டும். அவளைஎடுத்துக்கொண்டுவந்துவிடலாம். ஏ அசுரநாயக! அவள் ஸ்திரீகளுள் ரத்னமானவளே. மிகவும் அழகிய அங்கங்களையுடைய அவள் தனது அழகால் திக்குகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு அங்கேயிருக்கிருள். ஹே அசுரச்ரேஷ்டனே! அவளை நீர் பார்க்கவேண்டும். ரத்னங்களும் மேலான மணிகளும் யானை குதிரை முதலானவைகளும் இன்னும் மூன்று உலகங்களிலும் எவை சிரேஷ்டமானவைகளோ அவைகளெல்லாம் நமது அரண்மனையில் பிரகாசித்துக்கொண்டிருகின்றன. இந்திரனிடமிருந்து சிரேஷ்டமான யானையாகிய ஐராவதம் இங்குகொண்டுவரப்பட்டது. நிழலுடன் கூடின பாரிஜாதமும் கொண்டுவரப்பட்டது. அப்படியே உச்சைச்ரவம் என்னும் குதிரையும் வந்துவிட்டது. ஹம்ஸங்கள் கட்டிய புஷ்பக விமானமும் உமது முற்றத்தில் நிற்கின்றது. இது பிரம்மாவிற்கு அத்புதமான ரத்னம் போன்றது. இதுவும் வந்து விட்டது. குபேரனிடமிருந்து மஹாபத்மம் என்னும் நிதியும் இங்கு வந்துவிட்டது. சமுத்திர ராஜனும் வாடாத தாமரைப் புஷ்பங்களையும் அழகிய தாதுகளையுமுடைய மாலையைக்கொடுத்து விட்டான். அப்படியே நமது அரண்மனையில் வருணன் ஸமர்ப்பித்த தங்ககாந்தியையுடைய குடையும் நன்கு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆதியில் பிரம்மாவிற்கிருந்த ரத

மும் இப்போது நமக்கிருக்கின்றது. அப்படியே யமனுடைய உத்கிராந்தி என்னும் சக்தியும் உம்மிடமிருக்கின்றது. வருணனுடைய பாசமும் உமது சஹோதரனுடையதே. சமுத்திரத்திலுண்டான சகலமான ரத்னஜாதிகளும் உமது ஸஹோதரனுடையவைகளே. அக்னியும் மஹாசுத்தமான இரண்டு வஸ்திரங்களையும் உமக்குக் கொடுத்தான். ஏ அசுர சிரேஷ்ட! இம்மாதிரி ஸகல சிரேஷ்டமான வஸ்துக்களையும் நீர் கொண்டுவந்துவிட்டீர். அவ்விதமிருக்க, ஸ்திரீகளுள் ரத்னமான மங்களகரமான இந்த ஸ்திரீயை மாத்திரம் ஏன் கொண்டுவரக்கூடாது?

மகர்ஷி சொன்னார் :—இவ்விதம் சண்டமுண்டர்களின் வார்த்தையைக் கேட்ட சும்பன் உடனே சுக்ரீவன் என்னும் அசுரனை தேவியின் சமீபத்தில் தூதனாக அனுப்பினான். 'நீ போய் இவ்விதம் நான் சொன்னதாய் அவளிடம் சொல்லவேண்டும். அவள் தன்னிஷ்டத்துடனே என்னிடம் சீக்கிரம் வரும்படி செய்யவேண்டும்.' அவன் தேவியிருக்கும் அந்த அழகிய மலைப்பிரதேசத்திற்குச் சென்று மிகவும் மிருதுவாய் மதுரமான சப்தத்தோடு சொன்னதாவது :—

ஏ தேவி! மூன்று உலகங்களுக்கும் பரமேச்வரனாய் சும்பன் என்னுமோர் அசுரராஜன் இருக்கின்றார். நான் அவரது தூதன். அவரால் அனுப்பப்பட்டு உனது சமீபம் வந்தேன். சகல தேவயோனிகளிலும் அவரது கட்டளைக்குத் தடையே கிடையாது. அவர் ஸகல தேவர்களையும் ஜயித்தவர். அவர் உத்தரவைக்கேள் :—

ஸமஸ்தமான மூன்று உலகங்களும் என்னுடையதே. தேவர்களெல்லாம் எனக்கு வசமானவர்கள்.

தனித்தனியாய்க் கொடுக்கும் யஞ்ஞபாகங்களை யெல்லாம் நானே சாப்பிடுகிறேன். மூன்று உலகங்களிலும் சிரேஷ்டமான ரத்னங்களெல்லாம் எனக்கு வசமானவை. தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து உண்டான சிரேஷ்டமான யானையாகிய ஐராவதம் என்பதையும் குதிரையான உச்சைச்ரவம் என்பதையும்என்னிடம் நமஸ்கரித்துக் கொடுத்து விட்டுப் போனார்கள்.

இன்னும் மற்ற தேவர்களிடமும் கந்தர்வர்களிடமும் நாகர்களிடமும் உள்ள சிரேஷ்டமான வஸ்துக்களெல்லாம் என்னிடமே விளங்குகின்றன. உன்னை உலகில் ஸ்த்ரீரத்னமென்றே எண்ணுகிறோம். அவ்விதமான நீ நம்மையடைய வேண்டும். ஏனெனில் நாம் சிரேஷ்டமான வஸ்துக்களை அதிகமாய் அனுபவிக்கிறவர்கள். நீ என்னையாவது அடையலாம். அல்லது அதிபராக்ரமசாலியான என் தம்பியான நிசும்பனையாவது அடையலாம். சஞ்சலமான கடைக்கண்களை யுடையவளே! நீ ரத்னம்போன்றவளாயிருப்பதால் இவ்விதம் அவசியம் அடையவேண்டும். என்னை யடைந்துவிட்டால் ஸகல மேலான ஐச்வரியங்களையும் நிச்சயமாய்ப் பெறுவாய். இதை நல்ல புத்தியோடு நன்கு ஆலோசித்து எனக்குப் பத்தினியாகிவிடு.

மஹர்ஷி கூறினார் :— இவ்விதம் சொல்லப்பட்டதும் மூன்று உலகங்களையும் தரிக்கின்ற துர்க்கையாயும் உலகக்ஷேமகாரியாயுமுள்ள தேவியானவள் தனக்குள்ளேயே மிகவும் சிரித்துக் கொண்டு கம்பீரமாய் அப்போது கூறினாள் :—

நீ சொன்னது உண்மைதான். இவ்விஷயத்தில் நீ பொய்யொன்றும் சொல்லவில்லை. சும்பனென்ப

வன் மூன்று உலகங்களுக்கும் அதிபதியே. நிசும்பனும் அப்படிப்பட்டவன் தான். ஆனால் இவ்விஷயத்தில் நான் பிரதிஞ்ஞை செய்திருப்பதை எவ்விதம் பொய்யாக்குவது. ஆதிகாலத்தில் அல்ப புத்தியினால் இவ்வாறு நான் பிரதிஞ்ஞைசெய் திருக்கிறேன். அதைக் கேள். 'சண்டையில் என்னை யார் ஜயிக்கின்றானோ, எவன் எனது கொழுப்பைப் போக்குவானோ, உலகில் எனக்கு மேற்பட்ட பலசாலியாய் எவனிருப்பானோ, அவன் எனக்கு பர்த்தாவாய் ஆகக்கடவான்'. ஆகையால் சும்பனாவது அல்லது நிசும்பன் என்னும் மகாஅசுரனாவது என்னை ஜயித்துவிட்டு உடனே சீக்கிரமாய் என்னை விவாகம் செய்துகொள்ளட்டும்.

தூதன் கூறினான்:—ஏ தேவி! நீ மிகவும் கர்வமடைந்தவளாயிருக்கிறாய். என்னெதிரில் இவ்வாறு சொல்லாதே. மூன்றுலகிலும் சும்ப நிசும்பர்களுக்கெதிரில் எந்த மனிதன் நிற்பான்? யுத்தத்தில் மற்ற அசுரர்களுக்கும் எதிரில் எந்த தேவர்கள்தான் நிற்பார்கள். அப்படியிருக்கையில், ஒருத்தியாகிய ஸ்திரீயான நீ எவ்வளவு மாத்திரம்? யுத்தத்தில் இந்திரன் முதலிய ஸமஸ்தமான தேவர்களும் எவர்களுக்கெதிராக நிற்க முடியவில்லையோ, அவ்விதமான அந்த சும்ப நிசும்பர்களுக்கெதிரில் ஸ்திரீயாகிய நீ எவ்விதம் நிற்பாய்? இப்போது நான் சொல்லுகிறபடி நீ சும்ப நிசும்பர்களுடைய சமீபம் போய்ச் சேர். உன்னை மயிரைப் பிடித்திழுத்து கௌரவம் போனபிறகு நீயே போகவேண்டாம்.

தேவி கூறினாள்:—இது உண்மைதான். சும்பனும் மிகவும் பலமுள்ளவன். நிசும்பனும் மிகவும் பராக்ரம முள்ளவன் தான். என்ன செய்வேன். அந்தக்காலத்தில் ஆலோசிக்காமல் பிரதிஞ்ஞை செய்துவிட்டேன். நீ போய் நான் சொன்னதெல்லாவற்றையும் ஆதரவுடன் அந்த அசுரநாதனிடம் சொல். அவன் உசிதமானதைச் செய்யட்டும்.

ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

ஆறுவது அத்யாயம்

தூம்ரலோசன வதம்

மஹர்ஷி கூறினர்:—இவ்விதம் தேவியின் வார்த்தையைக் கேட்ட அந்த தூதன் நிறைந்த பொறுமையுடன் அந்த அசுரராஜனிடம் சென்று எல்லாவற்றையும் விஸ்தாரமாய்க் கூறினன். பிறகு அந்த அசுரராஜன் அந்த தூதன் சொன்ன வார்த்தையைக் கேட்டு அதிகமான கோபத்தோடு அசுரர்களின் அதிபதியான தூம்ரலோசனன் என்பவனிடம் கூறினன். 'ஏ தூம்ரலோசன! நீ சீக்கிரம் உனது சேனைகளுடன் அங்கு சென்று துஷ்டையான அந்த ஸ்திரீயை மயிரைப் பிடித்திழுத்து மிகவும் கலங்கும்படி இங்குக் கொண்டுவா. அவளைக் காப்பாற்றுவதற்கு யாராவது வந்தால் அவன் தேவனயிருந்தாலும் யக்ஷனயிருந்தாலும் அல்லது கந்தர்வனயிருந்தாலும் அவனை உடனே கொன்றுவிடவேண்டும்.'

இவ்விதம் அவனல் உத்தரவிடப்பட்ட அந்த அசுரனன தூம்ரலோசனன் அறுபதினயிரம் அசுரர்களால் சூழப்பட்டு உடனே புறப்பட்டுப் போனன். உடனே ஹிமாசலத்தில் வீற்றிருக்கும் தேவியைப் பார்த்து 'சும்ப நிசும்பர்களின் சமீபம் புறப்பட்டுவா; நீ பிரீதியுடன் எனது யஜமானனை இப்போதே வந்து சேராவிட்டால் பிறகு உன்னை மயிரைப் பிடித்து இழு

த்து பலாத்காரமாய் கொண்டு போவேன். அப்போது உனக்கு அதிககஷ்டம் உண்டாகும்' என்று இரைந்து கத்தினன்.

தேவீ கூறினள் :—அசுரராஜனல் அனுப்பப் பட்ட அதிபலசாலியான நீ சேனைகளால் சூழப்பட்டு என்னைப் பலாத்காரமாய் இழுத்துக்கொண்டு போனல் நான் என்ன செய்வேன் ?

மஹர்ஷி கூறினர் :—இவ்விதம் சொல்லப்பட்ட அந்த அசுரனன தூம்ரலோசனன் தேவியை எதிர்த்து ஓடினன். உடனே அம்பிகையானவள் தனது ஹூம் காரத்தினல் அவனைச் சாம்பலாக்கி விட்டாள்.

பிறகு அம்பிகையானவள் அதி கோபத்தை யடைந்த அந்த அசுரர்களின் பெரும் சேனையை நோக்கிக் கருக்கான பாணங்களையும் சக்தியாயு தங்களையும் கோடரிகளையும் வெகுவாய் வர்ஷித் தாள். பிறகு தேவியின் வாஹனமான அந்த சிங்கமானது கோபத்தோடு பிடரிமயிர்களை உதறிக் கொண்டு மிகவும் பயங்கரமாய் கர்ஜித்துக்கொண்டு அசுரர்களின் சேனையின் மத்தியில் வந்து விழுந்தது. சில அசுரர்களைக் கையினலும், சிலரை வாயினலும், மற்ற மகா அசுரர்களை மேல் விழுவதாலும் கொன்று விட்டது. அந்த சிங்கமானது சிலரின் குடல்களைத் தனது நகங்களால் பிடுங்கி விட்டது. அப்படியே உள் ளங்கைகளால் அடித்துத் தலைகளை வேருகச் செய்து விட்டது. அப்படியே வேறு சிலர் தலை கை போன வர்களாகச் செய்யப்பட்டார்கள். பிடரி மயிர்களை உத றிக்கொண்டு மற்றவரின் வயிற்றிலிருந்து ரத்தத்

தை ஏராளமாய்க் குடித்தது. அதிகோபமடைந்த தேவியின் வாஹனமான அந்த ஸிம்மத்தால் அந்த சைன்யம் முழுவதும் ஒருக்ஷணத்திற்குள் நாசமாக்கப்பட்டது. அந்த தூம்ரலோசனன் என்னும் அசுரன் தேவியினுல் கொல்லப்பட்டதையும், அப்போது தேவியின் சிங்கத்தால் சேனை முழுவதும் நாசமானதையும் கேட்டு அசுரராஜனுகிய சும்பன் மிகவும் கோபமடைந்தான்; உதடுகள் துடித்தன. பிறகு சண்டன் முண்டன் என்னும் மஹா அசுரர்களைக் கூப்பிட்டுக் கட்டளையிட்டான். ஏ சண்டனே! ஏ முண்டனே! நீங்கள் ஏராளமான சேனைகளால் சூழப்பட்டு அங்கே போய் அவளைச் சீக்கிரம் கொண்டுவாருங்கள். மயிரைப் பிடித்திழுத்துக்கொண்டாவது அல்லது கட்டியாவது எப்படி உங்களுக்கு அனுகூலமோ அவ்விதம் இங்குக் கொண்டுவாருங்கள். இன்னும் பாக்கியுள்ள ஆயுதங்களாலும் அசுரவீரர்களாலும் சண்டையில் அவளை ஜயித்துவிடுங்கள். அந்த துஷ்டையையும் சிங்கத்தையும் சண்டையில் நன்கு ஜயித்து அவளைக் கட்டிக்கொண்டாவது பிடித்துக் கொண்டாவது சீக்கிரம் வந்துசேருங்கள்.

ஆறவது அத்யாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

ஏழாவது அத்யாயம்

சண்ட முண்ட வதம்

மகர்ஷி கூறினர்:— இவ்விதம் கட்டளையிடப்பட்ட அந்த சண்டன் முண்டன் முதலியோர் ஆயுதங்களைத் தூக்கி யெடுத்துக்கொண்டு ரதம் கஜம் துரகம் பதாதி யென்னும் சதுரங்க பலத்துடன்கூட தேவியின் சமீபம் சென்றூர்கள். அங்கே பெரிய மலையின் தங்கச்சிகரத்தில் சிம்மத்தின் மேல் வீற்றிருக்கின்றவும் கொஞ்சம் புன்சிரிப்புடன் கூடியவுமான தேவியைக்கண்டார்கள். உடனே அவளைப் பிடிப்பதற்கு ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வில் கத்தி முதலியவைகளை இழுத்து வைத்துக்கொண்டு அவளுடைய சமீபம் சென்றூர்கள். உடனே அம்பாள், அந்த சத்ருக்களின் மீதுபெரிய கோபங்கொண்டாள். அதனுல் அவளுடைய முகம் மைபோன்ற வர்ணமுள்ளதாயிற்று. அப்போது புருவநெறியால் பயங்கரமான அவளுடைய நெற்றியிலிருந்து பயங்கரமான முகத்தையுடைய காளியானவள் கத்தி பாசாயுதம் இவைகளை யெடுத்துக்கொண்டு வெளிப்புறப்பட்டாள். அவள் விசித்திரமான கேடயத்தைத் தரித்துக்கொண்டும் மனிதனின் மாலையை ஆபரணமாய் அணிந்துகொண்டும் புலித்தோலைக் கட்டிக்கொண்டும் உலர்ந்த மாம்சமுடையவளாயும், மிக

வும் பயங்கரமாயும் விஸ்தாரமாயுமுள்ள வாயையுடைய வளாயும் நீண்ட நாக்கினல் பயங்கரமாயும், ஆழ்ந்த ரக்தமான நேத்திரங்களை யுடையவளாயும், பயங்கர மான சப்தத்தால் திக்குகளை யெல்லாம் வியாபித்துக் கொண்டும் இருந்தாள். அவள் பெரும் அசுரர்களை யெல் லாம் பக்ஷித்துக்கொண்டு அந்த அசுரரின் மஹா சைன் யத்தில் வேகமாய் விழுந்து இன்னும் அந்த சைன்யத் தைத் தின்ன ஆரம்பித்தாள். பின் செல்லுகிறவர், மாவெட்டி, மணி, வீரர்கள் இவைகளுடன் கூடின பெரும் யானைகளை ஒரு கையால் எடுத்து அப்படியே வாயில் போட்டுக்கொண்டாள். அப்படியே குதிரை களோடு யுத்தவீரர்களையும் சாரதிகளோடு ரதங் களையும் வாயிற் போட்டுக் கொண்டு மிகவும் பயங்கரமாய்ப் பற்களால் கடித்துத் தின்றாள். ஒரு வனை மயிரைப் பிடித்தும், மற்றவனைக் கழுத்தைப் பிடித்தும், வேறொருவனைக் காலால் உதைத்தும், இன்னுமொருவனை மார்பிலடித்தும் கொன்றாள். அந் தப் பெரும் அசுரர்களால் விடப்பட்ட ஆயுதங்களை யும் அஸ்திரங்களையும் அதிகோபத்தோடு வாயினல் பிடித்துப் பற்களால் கடித்துவிட்டாள். மிகவும் பலிஷ் டர்களான அந்த அசுரர்களின் சைன்யத்தை யெல் லாம் நாசமாக்கிவிட்டாள். சிலரைத் தின்றாள்; சிலரை யடித்தாள். சிலர் கத்தியினல் கொல்லப் பட்டார்கள்; சிலர் கேடயத்தால் அடிக்கப் பட்டார்கள். சில அசு ரர்கள் கோரப்பல் நுனியால்கொல்லப்பட்டு நாசமடைந் தார்கள். இவ்வாறு ஒரு க்ஷணத்துக்குள் அந்த அசுர ரின் சைன்யமெல்லாம் நாசமானது கண்டு சண்டன் மிக

வும் பயங்கரமான அந்தக்காளியை எதிர்த்து ஓடினன். உடனே குரூரமான கண்களையுடைய அந்த தேவியின் பேரில் பயங்கரமாய் பாணங்களை ஏராளமாய் வர்ஷித்தான். அப்படியே முண்டனும் ஆயிரக்கணக்கான சக்கிரங்களால் தேவியை மறைத்து விட்டான். அந்த வெகுவான சக்ரங்கள் மேகங்களின் மத்தியில் சூர்ய பிம்பம்போல் தேவியின் வாயில் விழுந்து வெகுவாய்ப் பிரகாசித்தன. அப்போது தேவியானவள் பயங்கரமாய் கர்ஜித்துக் கொண்டு மிகுந்த கோபத்தோடு பயங்கரமாய்ச்சிரித்தாள். அப்போது அவளது முகம்கோரப் பற்களால் மிகவும் பயங்கரமாய்ப் பிரகாசித்தது. உடனே பெரிய சிம்மத்திலிருந்தெழுந்து தேவியானவள் ஓடிப்போய் சண்டனை மயிரைப்பிடித் திழுத்துக் கத்தியினல் அவனது தலையை வெட்டினுள். சண்டன் விழுந்ததைக்கண்டு முண்டனும் அவளைக் குறித்து ஓடி வந்தான். அவனையும் கோபத்தோடு கத்தியால் வெட்டி பூமியில் தள்ளினுள். பிறகு கொல்லப்பட்டது போக மீதியிருந்த அந்த சைன்யமானது மகா வீர்யமுள்ள அந்த சண்டனும் முண்டனும் கொல்லப்பட்டதைக்கண்டு அதிக பயமடைந்து நாநாதிக்குகளிலும் ஓடிப்போய் விட்டது. காளியானவள் சண்டன் முண்டன் இவர்களின் தலையை எடுத்துக் கொண்டு சண்டிகையினிடம் வந்து பெரும் அட்டஹாஸத்தோடு இவ்விதம் கூறினுள்: "இந்த யுத்தமாகிய யாகத்தில் சண்டன் முண்டன் என்னும் இரண்டு பெரும் பசுக்களையும் உனக்கு நான்கொண்டு வந்துவிட்டேன். சும்பன் நிசும்பன் இவர்களை நீயே வதம்செய்யக் கடவாய்."

மஹர்ஷி கூறினர் :—அந்த மஹா அசுரர்களான சண்டன் முண்டன் இவர்களைக் கொணர்ந்ததைப் பார்த்து லலிதையான அந்தக்காளியினிடம் கல்யாணியான சண்டிகையானவள் கூறினள். "நீ சண்டன் முண்டன் இவர்களைக் கொன்று எடுத்துக் கொண்டு வந்ததால் உலகில் சாமுண்டை என்று பிரஸித்தமான தேவியாயிருப்பாயாக."

ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

எட்டாவது அத்யாயம்

ரக்தபீஜவதம்

மஹர்ஷி கூறினார்:— மகா அசுரனாகிய சண்டன் கொல்லப்பட்டதும் அப்படியே முண்டனும் கீழே தள்ளப்பட்டதும் பலமுள்ள சைன்யங்களெல்லாம் நாசமடைந்ததும் அசுரராஜனும் பராக்ரமசாலியாயும் உள்ள சும்பன் அதிகமான கோபத்தை யடைந்து அசுரசேனைகளுக்கெல்லாம் செய்யவேண்டிய வேலையைக் கட்டளையிட்டான். 'இப்போதே எண்பத்தாறு முக்கியமான அசுரர்களும் ஸமஸ்த பலங்களோடும் உயரத் தூக்கப்பட்ட ஆயுதங்களோடும் இன்னும் அசுரர்களின் ஐம்பது வம்சங்களும் கோடிக்கணக்கான வீரர்களோடும் தௌம்ரர் என்னும் அசுரர்களின் நூறு வம்சங்களும் காலகர் என்பவர்களும் தௌர்ஹிருதர் என்பவர்களும் மௌர்யர்களென்பவர்களும் காலகேயர்கள் என்னும் அசுரர்களும் எனது ஆஜ்ஞையால் சீக்கிரமாய் யுத்தத்திற்குத் தயாராய்ப் புறப்பட்டுப் போகட்டும்.' பயங்கரமான உத்திரவையுடைய சும்பன் இவ்விதம் கட்டளையிட்டு விட்டு அநேக ஆயிரக் கணக்கான பெரும் சேனைகளால் சூழப்பட்டுத்தானும் சண்டைக்குப் புறப்பட்டான். மிகவும் பயங்கரமான அந்த சேனை வருவதை சண்டிகாதேவி பார்த்து வில்லின் நாண்கயிறை டங்காரம் செய்து அந்த சப்தத்தால்

பூமியையும் ஆகாசத்தையும் நிறப்பிவிட்டாள். ஹே ராஜனே! உடனே சிம்மமும் மிகவும் பெரிய சப்தம் செய்தது. அம்பிகையும் மணியின் சப்தத்தால் அந்த சப்தங்களை இன்னும் விருத்தி செய்தாள். இவ்விதம் வில்லின் நாண்கயிறு, சிம்மம், மணி இவைகளின் சப்தங்களால் திக்குகளை யெல்லாம் வியாபிக்கும்படி செய்துவிட்டுக் காளியானவள் விஸ்தாரமாய் வாயைத்திறந்து பயங்கரமாய் சப்தமிட்டாள். இந்த சப்தங்களைக் கேட்டு அசுரர்களின் சேனைகள் நான்கு திக்குகளிலும் சிதறி ஓடின. தேவியின் சிம்மமும் அப்படியே காளியும் அதிக ரோஷமடைந்தார்கள். ஏ ராஜனே! இந்த சமயத்தில் தேவசத்ருக்கள் நாசமடையவும் தேவ சிரேஷ்டர்கள் சௌக்யமாய் விருத்தியடையவும் பிரம்மா, சிவன், சுப்ரமணியர், விஷ்ணு அவ்விதமே இந்திரன் இவர்களின் சக்திகள் அதிக வீர்யம் பலம் இவைகளுடன் கூட இவர்களின் சரீரங்களிலிருந்து வெளிப்பட்டு அவரவர்களின் ரூபங்களோடு சண்டிகா தேவியிடம் வந்து சேர்ந்தன.

எந்த தேவனுக்கு எந்த ரூபமோ எந்தெந்த வாகனமோ அலங்காரமோ அப்படியே அந்த சக்தியானது அசுரர்களோடு யுத்தம் செய்ய வந்தது. பிரம்மாவின் சக்தியானது ஜபமாலை கமண்டலு இவைகளைத் தரித்துக்கொண்டு ஹம்ஸங்கள் கட்டிய விமானத்தின் மீதேறிக்கொண்டு வந்தது. ஆதலால் அது பிரும்மாணீ என்றழைக்கப்படுகிறது. மஹேச்வரனுடையசக்தியான மாஹேச்வரீயானவள்சிலாக்யமான த்ரிசூலத்தைத் தரித்துக்கொண்டு விருஷப வாஹனத்

தின் மேலேறிக்கொண்டு பெரும் சர்ப்பத்தை மாலையாய்ப் போட்டுக்கொண்டு சந்திரனுடைய கிரணத்தை தலையலங்காரமாய்த் தரித்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். சுப்ரமணியரின் சக்தியான கௌமாரி யென்பவள் சக்தியென்னும் ஆயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டு சிரேஷ்டமான மயில் வாஹனத்தின் மேலேறிக்கொண்டு சுப்ரமணியரின் ரூபத்தோடு அசுரர்களுடன் சண்டையிட வந்துசேர்ந்தாள். அப்படியே மஹாவிஷ்ணுவின் சக்தியான வைஷ்ணவியானவள் கருடவாஹனத்தின் மீதேறிக்கொண்டு சங்கு சக்கிரம் கதா சார்ங்கம் கத்தி இவைகளைக் கையில் தரித்துக்கொண்டு சண்டைக்காக வந்தாள். மஹாவிஷ்ணுவின் யஜ்ஞவராஹ ரூபத்தை தரிக்கும் சக்தியும் வாராஹி யென்ற ரூபத்தோடு அங்கே வந்துசேர்ந்தாள். நரஸிம்மத்திற்கு சமமான ரூபத்தை யெடுத்துக் கொண்ட நாரஸிம்ஹீ யென்னும் சக்தியும் யானைக்கூட்டங்களைத் தூக்கி யெறிவதால் நக்ஷத்திரக் கூட்டங்களையெல்லாம் சிதற அடித்துக்கொண்டு அங்கே வந்தாள்.

அப்படியே இந்திரனுடையதான ஐந்திரீ என்னும் சக்தியும் யானை சிரேஷ்டமான ஐராவதத்தின் மீதேறிக் கொண்டு இந்திரன்போல் ஆயிரங்கண்களோடு அங்கே வந்து சேர்ந்தாள். பிறகு இந்த தேவசக்திகளால் சூழப்பட்ட ஈசானர் 'எனது இஷ்டத்தால் அசுரர்கள் சீக்கிரம் கொல்லப்படட்டும்' என்று சண்டிகையிடம் சொன்னார். பிறகு தேவியின் சரீரத்திலிருந்து மிகவும் பயங்கரமாக நூறு நரிகள்போல் கத்திக்கொண்டு ஒரு சண்டிகாசக்தியானது வெளிக்

கிளம்பிற்று. ஜயிக்கமுடியாமலிருக்கும் அவளும் புகை நிறமுள்ள ஜடைகளையுடைய அந்த ஈசானரிடம் இவ்வாறு கூறினுள். ஹே பகவானே! நீர் சும்பன் நிசும்பன் என்னும் அசுரர்களிடம் தூதனுகப்போய் மிகவும் கர்வங் கொண்டிருக்கும் அவர்களிடமும் இன்னும் சண்டைக்காக எந்த பலிஷ்டர்களான அசுரர்கள் வந்திருக்கிறுர்களோ அவர்களிடமும் இவ்விதம் சொல்லவேண்டும். 'இந்திரன் த்ரிலோகங்களின் ஆதிபத்யத்தையும் அடையவேண்டும். தேவர்களும் ஹவிர்ப்பாகத்தையடையவேண்டும். நீங்கள் பிழைத்திருக்கவேண்டுமென்று இஷ்டப்பட்டால் உடனே பாதாளத்திற்குப் போய்விடுங்கள். இல்லாவிட்டால் பலத்தினுல் கொழுப்படைந்து நீங்கள் யுத்தம்செய்ய இஷ்டப்பட்டால் யுத்தத்திற்கு வாருங்கள். எனது நரிகள் உங்கள் மாம்ஸத்தைத் தின்று திருப்தி யடையட்டும்.' இவ்விதம் அந்த தேவியால் சிவனே அந்த அசுரனிடம் தூதனுக அனுப்பப்பட்டதால் அவள் இவ்வுலகில் சிவதூதி யென்று பிரஸித்தி யடைந்தாள். அந்த மகா அசுரர்களும் ஈச்வரனுல் சொல்லப்பட்ட அந்த தேவியின் வார்த்தையைக் கேட்டு நிறைந்த பொறுமையுடனும் கர்வத்துடனும் காத்யாயனி இருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். உடனே முதலிலேயே தேவியின்மீது பாணங்களையும் சக்திகளையும் தடிகளையும் தாராளமாய் வர்ஷித்தார்கள். அவளும் விளையாட்டாகவே இழுக்கப்பட்ட வில்லினுல் விடப்பட்ட அம்புகளால் அவர்கள் வர்ஷித்த சூலம் சக்தி கோடாலி இவைகளைத் தடுத்துவிட்டாள். அப்படியே காளியும் அவர்களுக்கெதிரில் சத்ருக்களை சூலங்

களாலும் கேடயங்களாலும் வெட்டிப் பிளந்துகொண்டே ஸஞ்சரித்தாள். பிரும்மாணியானவள் தான் சஞ்சரிக்கும் இடத்திலுள்ள சத்ருக்களைக் கமண்டலுவிலிருந்து ஜலத்தைத் தெளித்து வீர்ய மற்றவர்களாயும் ரோஷமற்றவர்களாயும் செய்து விட்டாள். மாகேச்வரீயானவள் திரிசூலத்தினாலும், அவ்விதமே வைஷ்ணவியானவள் சக்கிராயுதத்தினாலும், அப்படியே அதி கோபத்துடன் கூடிய கௌமாரியானவள் சக்தி யாயுதத்தினாலும் அசுரர்களை வதம் செய்தார்கள். ஆயிரக் கணக்கான அசுரர்களும் ராக்ஷஸர்களும் ஐந்திரியின் வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்டும் பிளக்கப்பட்டும், ரக்தபிரவாஹத்தினால் வியாபிக்கப்பட்டும் பூமியில் விழுந்தார்கள். வாராஹியால் சக்கிராயுதத்தினால் அடிக்கப்பட்டவர்களும் மூக்கின் அடியால் நாசம்செய்யப் பட்டவர்களும் கோரப்பற்களின் நுனியால் கிழிக்கப்பட்ட மார்பையுடைவர்களுமான அநேக அசுரர்கள் கீழே விழுந்தார்கள். நாரஸிம்ஹீ என்னும் சக்தியும் தனது பயங்கரமான சப்தத்தால் திக்குகளை யெல்லாம் நிரப்பிக்கொண்டு அநேக அசுரர்களை நகங்களால் கிழித்துத் தின்றுகொண்டு யுத்த பூமியில் ஸஞ்சரித்தாள். பிறகு சிவதூதியால் பயங்கரமான பெரும் சிரிப்பால் அடிக்கப்பட்ட வெகு அசுரர்கள் உடனே பூமியின் மீது விழுந்து விட்டார்கள். பிறகு அவள் இவர்களைக் கடித்துத் தின்றாள்.

இவ்விதம் மாத்ருகணங்கள் அதிககோபமடைந்து அநேக உபாயங்களினால் மகா அசுரர்களை யெல்லாம் ஸம்ஹாரம் செய்வதைப் பார்த்து அசுரர்களின் யுத்த

வீரர்களெல்லாம் தானே நாசமடைந்தார்கள். அந்த ஸேனைகள் மாத்ருகணங்களால் பீடிக்கப்பட்டு நாச மாவதைக் கண்டவுடன் ரக்தபீஜன் என்னும் ஒரு மஹா அஸுரன் கோபத்தோடு சண்டைசெய்ய வந் தான். இவன் சரீரத்தலிருந்து ஒரு ரக்தத்தின் துளி கீழேவிழுந்தால் அதிலிருந்து இவனைப்போல் ஒரு அசுரன் அப்போதே உண்டாகி விடுவான். (ஆதலால் இவனுக்கு இப்பெயர் வந்தது.) அந்தப்பெரிய அசுரன் அப்போது கதாயென்னும் ஆயுதத்தைக்கையில் ஏந்தி இந்திரசக்தியுடன் சண்டை செய்தான். உடனே ஐந் திரியானவள் தனது வஜ்ராயுதத்தால் இவனை யடித் தாள். உடனே இவனது சரீரத்திலிருந்து ரக்தம் பெருகிற்று. அதிலிருந்து அவனைப் போலவும் அவ னது பராக்ரமமுமுடைய அவ்வளவு யுத்த வீரர் கள் உடனே உண்டானார்கள். அவன் சரீரத்திலிருந்து எவ்வளவு ரக்தபிந்துக்கள் கீழே விழுந்தனவோ அவ் வளவு யுத்த வீரர்கள் அவனுக்கு ஸமமான வீர்யம் பலம் இவைகளுடன் உண்டானார்கள். ரக்தத்திலிருந் துண்டான அந்தப்புருஷர்களும் சண்டை செய்தார்கள். மாத்ரு கணங்களும் மிகவும் பயங்கரமாய்ச் சண்டை யிட்டார்கள். சஸ்திரங்கள் விழுந்ததும் மிகவும் பயமா யிருந்தது. மறுபடியும் வஜ்ராயுதத்தால் அவன் மண்டை யடிபட்டதும் ரக்தம் கீழே பிரவாஹமாய் ஓடினதும் அதிலிருந்து ஆயிரகணக்கான புருஷர்கள் உண்டா னார்கள். வைஷ்ணவியானவள் இவனைத் தனது சக்ரத் தினால் அடித்தாள். அப்படியே ஐந்திரீயும் அந்த மகா அசுரனைத் தனது கதையினாலடித்தாள். வைஷ்ணவீ

சக்ரத்தினலடித்ததும் அந்த ரக்தத்திலிருந்துண்டான அவனைப் போன்ற ஆயிரக்கணக்கான புருஷர்களால் உலகம் நிறைந்து விட்டது. கௌமாரீ சக்தியாயுதத்தாலும் வாராஹீ என்பவள் கத்தியினலும் மாகேச்வரீயானவள் த்ரிசூலத்தாலும் அந்தரக்தபீஜன் என்னும் மஹா அசுரனை அடித்தார்கள். அந்தமகா அசுரனன ரக்த பீஜனும் அதிக கோபமடைந்து அந்த மாத்ரு கணங்களைத் தனித்தனியாய்க் கதையினல்அடித்தான். பிறகு சக்தி சூலம் முதலிய ஆயுதங்களால் வெகுவாய் அடிக்கப்பட்ட அவன் தேஹத்திலிருந்து கீழேவிழுந்த ரக்தத்திலிருந்துண்டான யுத்த வீரர்களால் பூமி முழுவதும் நிறைந்து விட்டது. உடனே அவர்களால் உலகம் முழுவதும் வியாபிக்கப் பட்டது. பிறகு தேவர்களும் அதிகமாய் பயந்தார்கள். அப்போது பரபரப்புடன் சண்டிகையானவள் தேவர்கள் வருத்தமடைந்ததைப் பார்த்துக் காளியினிடம் இவ்விதம் கூறினள். 'ஏ சாமுண்டே! நீ வாயை விஸ்தாரமாகச் செய். நான் ஆயுதங்களால் அடித்து விழும் ரக்தபிந்துக்களை பூமியில் விழாதபடி நீ உடனே வேகமாய்க் குடித்து விடு. அப்படி உண்டாகும் அசுரர்களையும் நீ தின்றுகொண்டே யுத்தத்தில் ஸஞ்சரி. அப்போது அந்தரக்தபிந்துக்கள் கீழே விழாததால் அசுரர்கள் உண்டாகமாட்டார்கள். உடனே அவனது ரத்தமும் குறைந்து அவனும் நாசமடைவான். மற்ற வேறு அசுரர்களும் உண்டாக மாட்டார்கள்.' இவ்விதம் சொல்லிவிட்டு தேவியானவள் அவனை சூலத்தினல் அடித்தாள். காளியும் தனது வாயினல் ரக்த பீஜனுடைய ரக்தத்தைப் பிடித்துக்கொண்

டாள். உடனே அவன் கதையினல் சண்டிகையை அடித்தான். ஆனல் தேவிக்கு அது கொஞ்சம் கூட வேதனையை உண்டாக்கவில்லே. அடிபட்ட அந்த அசுரன் தேகத்திலிருந்து ஏராளமாய் ரக்தம் பெருகிற்று. அதைத் தனது வாயினல் சாமுண்டா கிரகித்துக்கொண்டதும் அதிலிருந்து மகா அசுரர்கள் உத்பத்தியானர்கள். அவர்களேயும் சாமுண்டா தின்று அவர்களுடைய ரக்தத்தையும் குடித்தாள். இவ்வாறு சாமுண்டாவானவள் ரக்தத்தைக் குடித்துக்கொண்டிருக்கும் போதே தேவியானவள் அவனே சூலத்தினலும் வஜ்ராயுதத்தினலும் பாணங்களாலும் கத்திகளாலும் தடிகளாலும் வெகுவாய் அடித்தாள். சாமுண்டா ரக்தபானம் செய்து கொண்டிருக்கும் போதே அவனேக் கொன்ருள். இப்படிக் கூட்டங் கூட்டமான ஆயுதங்களால் அடிக்கப்பட்ட ரக்தபீஜன் என்னும் மகா அசுரன் ரக்த மற்றுப்போய் பூமியின்மேல் விழுந்தான்.

ஓ அரசனே! உடனே அந்த தேவர்களெல்லாம் அதிக சந்தோஷமடைந்தார்கள். மாத்ருக் கூட்டங்களும் வெகுவாய் அவர்களின் ரத்தத்தைப் பானம் பண்ணிவிட்டு அதனல் அதிக மதமடைந்து நர்த்தனம் செய்தார்கள்.

எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

ஒன்பதாவது அத்தியாம்

நிசும்ப வதம்

அரசன் கூறினன்:— ஏ பகவானே! தாங்கள் எனக்குக்கூறிவந்த தேவியின் இந்தசரிதத்தின் மகிமை மிகவும் விசித்திரமாயிருக்கின்றது. அதிலும் இந்த ரக்தபீஜனது வதமானது மிகவும் ஆச்சரியகரமானது. இவ்விதம் ரக்தபீஜன் கொல்லப்பட்டதும் அதிகோபமுள்ள ஸும்பனும் நிஸும்பனும் என்ன செய்தார்கள்? அதை மேலே கேட்க விரும்புகிறேன்.

மகர்ஷி கூறினர்:— யுத்தத்தில் ரக்தபீஜனென்னும் மகா அசுரன் கொல்லப்பட்டதும் இன்னும் மற்ற வீரர்களும் கொல்லப்பட்டதும் பிறகு மகா சைன்யம்நாசமாக்கப்பட்டதையும் பார்த்து ஸும்பனும் நிஸும்பனும் அதிகமான பொறுமையடைந்து, கோபத்தையும் அதிகமாய் அடைந்தார்கள். பிறகு முக்யமான அசுர சேனையோடு நிசும்பன் தேவியைக்கொல்ல ஓடி வந்தான். அப்படியே அம்பாளுக்கு முன்னலேயும் பின்னலேயும் இரண்டு பக்கங்களிலும் மகா அசுரர்கள் அதி கோபத்தோடு உதடுகளைக் கடித்துக்கொண்டு தேவியைக் கொல்ல எதிர்த்து ஓடிவந்தார்கள். அப்போது பராக்ரமசாலியான சும்பனும் மாத்ருக்களோடு யுத்தம் செய்துவிட்டு சண்டிகையைக் கொல்லுவதற்காக தனதுசேனைகளால் சூழப்பட்டு

அங்கே வந்தான். அப்போதுதேவிக்கும் சும்ப நிசும்பர்களுக்கும் மிகவும் பயங்கரமான சண்டையுண்டாயிற்று. அதில் இருவரும் மேகங்கள் போல பாணங்களை அதிகமாய் வர்ஷித்தார்கள். சண்டிகையானவள் சீக்கிரமாய்த் , தனது பாணக் கூட்டங்களால் அவர்கள் போடும் பாணக் கூட்டங்களைத் தடுத்துக்கொண்டு அவ்விரு அசுர சிரேஷ்டர்களையும் தனது பாண வர்ஷங்களால் வெகுவாய் அடித்தாள். நிசும்பன் நல்ல கருக்கான கத்தியையும் பளபளப்பான உறையையும் எடுத்து அம்பாளின் உத்தம வாஹனமான சிம்மத்தைத் தலையில் அடித்தான். இவ்விதம் வாஹனம் அடிபட்டதும் தேவியானவள் நிசும்பனுடைய சிரேஷ்டமான கத்தியைத் தனது கத்தியாலும் அஷ்டசந்திரகமென்பதால் அவனது கவசத்தையும் சீக்கிரம் அறுத்து விட்டாள். கத்தியும் கவசமும் அறுபட்டவுடன் அந்த மகா அசுரன் சக்தியென்னும் ஆயுதத்தை விட்டெறிந்தான். எதிர்த்துவந்த அதையும் சக்கிரத்தால் இரண்டாய் அறுத்துவிட்டாள். பிறகு கோபம் பொங்கிய அவன் சூலத்தையெடுத்துக் கொண்டு எறிந்தான். தேவியானவள் எதிர்த்துவந்த அதையும் தனது முஷ்டியால் பொடியாக்கிவிட்டாள். அவனும் கதையைச் சுழற்றிச் சண்டிகையின்மேல் எறிந்தான். அதுவும் தேவியின் சூலத்தால் பிளக்கப்பட்டு சாம்பலாயிற்று. பிறகு அந்த அசுரசிரேஷ்டன் கோடறியை யெடுத்துக் கொண்டு வருவதைப் பார்த்து தேவியானவள் பாணக் கூட்டங்களால் அவனை யடித்துப் பூமியின்மீது தள்ளினாள்.

பயங்கரமான பராக்ரமத்தை யுடைய நிசும்பன் என்னும் ஸஹோதரன் பூமியில் விழுந்ததும் மிகவும் கோபத்தை யடைந்த ஸும்பன அம்பிகையைக் கொல்லுவதற்கு ரதத்தின்மீதேறிக்கொண்டு எட்டு புஜங்களிலும் மேலான உயர்ந்த ஆயுதங்களைக் கிரஹித்துக்கொண்டு ஆகாசம் முழுவதையும் வியாபித்துக்கொண்டு வந்து சேர்ந்தான். அவன் வருவதைப் பார்த்தவுடனே அம்பிகையானவள் சங்கத்தை வாசித்தாள். மிகவும் ஸஹிக்கமுடியாத வில்லின் நாண்கயிற்றின் சப்தத்தையும் செய்தாள். தனது மணியின் சப்தத்தால் திக்குகளை நிறப்பிவிட்டாள். அந்த சப்தமானது ஸமஸ்தமான அசுரசேனைகளின் வீர்யத்தைப் போக்கடித்து அவர்களை வதம் செய்யக்கூடியதா யிருந்தது. உடனே சிம்மமானது தனது பெரும் கர்ஜனையால் மஹத்தான யானைகளின் மதங்களைப் போக்கி ஆகாயத்தையும் பூமியையும் பத்துத் திக்குகளையும் நிறப்பி விட்டது. பிறகு காளியானவள் ஆகாசத்தில் துள்ளிக் கிளம்பி பூமியை இரண்டு கைகளாலும் அடித்தாள். அந்த சப்தத்தால் முன்னேயிருந்த ஸகலசப்தங்களும்மறைந்து போயின. சிவதூதியானவள் முன்னால் பார்க்கப்படாத மிகவும் பயங்கரமான சிரிப்பை யடைந்தாள். அந்தச் சப்தங்களால் சும்பன் மேலான கோபமடைந்தான். 'ஏ துராத்மாவே! நில் நில்' என்று அம்பிகை சொன்னவுடன் ஆகாசத்தில் நின்றுகொண்டிருந்ததேவர்களெல்லாம் 'ஜய ஜய' வென்று சந்தோஷத்தோடு கோஷம் செய்தார்கள். சும்பன் வந்தவுடனே மிகவும் பயங்கரமான சக்தியாயுதத்தை விட்டான். நெருப்புக் கூட்டம்

போல் ஜ்வாலைகளை கக்கிக்கொண்டு வரும்போதே அது பெரும் கொள்ளிக்கட்டையால் தடுக்கப்பட்டது. அப்போது சும்பன் சிம்மநாதம்செய்தான். அதனால் மூன்று லோகங்களும் வியாபிக்கப்பட்டன. பயங்கரமான அந்தநாதம் இடியின் சப்தத்தை யெல்லாம் தூக்கி யெறிந்துவிட்டது. ஹே ராஜனே! தேவியானவள் சும்பன்விட்ட பாணங்களையெல்லாம் நூற்றுக்கணக்காயும் ஆயிரக்கணக்காயும் தனதுபாணங்களால் அறுத்துவிட்டாள். அவனும் அப்படியே செய்துவந்தான். பிறகு சண்டிகை கோபமடைந்து அவனை சூலத்தால் அடித்தாள். உடனே அவன் மூர்ச்சையடைந்து பூமியின் மேல் விழுந்துவிட்டான்.

அப்போது நிசும்பன்ஞாபகத்தையடைந்து வில்லை யெடுத்துக்கொண்டு பாணங்களால் தேவியையும் காளியையும் சிம்மத்தையும் அடித்தான். மறுபடியும் அந்த அசுர ராஜன் பதினாயிரம் கைகளையடைந்து சக்கிராயுதத்தால் சண்டிகையை மறைத்துவிட்டான். பிறகு பகவதியாயும் கஷ்டங்கள் பீடைகள் இவைகளை நிவர்த்தி செய்கிறவளாயுமிருக்கிற துர்க்கையானவள் கோபமடைந்து தனது பாணங்களால் அந்த சக்கிரங்களையும் பாணங்களையும் அறுத்துவிட்டாள். உடனே நிசும்பன் கதையை யெடுத்துக்கொண்டு அசுரசேனைகளால் சூழப்பட்டு அம்பிகையை அடிக்க வேகமாய் ஓடிவந்தான். அப்போதே சீக்கிரமாய் சண்டிகையானவள் அந்த கதையை கருக்கான கத்தியால் அறுத்துவிட்டாள். அவனும் சூலத்தை யெடுத்துக்கொண்டான். தேவர்களைப் பீடிக்கின்ற அவன் சூலத்தை யெடுத்துக்

கொண்டு ஓடிவருவதைப் பார்த்து சண்டிகையானவள் அதிவேகமாய் அவனை சூலத்தால் ஹிருதயத்தில் அடித்தாள்.

சூலத்தால் அடிக்கப்பட்ட அவனுடைய ஹிருதயத்திலிருந்து மகா பலம் பராக்ரமம் இவைகளையுடைய வேறொரு அசுரன் தேவியை 'நில் நில்' என்று சொல்லிக்கொண்டு உண்டானான். அவன் வெளிக்கிளம்பினதும் தேவியானவள் சிரித்துவிட்டுப்பெரும் சப்தம் செய்தாள். பிறகு கத்தியால் அவனது தலையை வெட்டினாள். உடனே அவன் பூமியில் விழுந்துவிட்டான். அப்போது சிம்மமானது தனது உக்ரமான கோரப் பல்லினால் தலையை நசுக்கிச் சிலரைக் கொன்று தின்றது. அப்படியே காளியும் சிலரைக்கொன்றாள். சிவதூதியும் சிலரைக்கொன்றாள். கௌமாரியும் தனது சக்தியாயுதத்தால் சிலரைக் கொன்றாள். பிரும்மாணியின் மந்திரத்தாலும் சுத்தமான தீர்த்தத்தாலும் சிலர் நாசமடைந்தனர். அப்படியே வேறு சிலர் மஹேச்வரியின் த்ரிசூலத்தால் கொல்லப்பட்டுக் கீழே விழுந்தனர். வாராஹியின் மூக்கால் அடிக்கப்பட்ட சிலர் பொடிப் பொடியாயினர். வேறு அசுரர்கள் வைஷ்ணவியின் சக்ரத்தால் துண்டு துண்டாய் செய்யப்பட்டனர். ஐந்திரியின் கையால் விடப்பட்ட வஜ்ராயுதத்தால் சில அசுரர்கள் நாசமடைந்தனர். சிலர் சண்டையை விட்டு ஓடிவிட்டனர். இன்னும் அநேகர் காளியாலும் சிவதூதியாலும் சிம்மத்தாலும் தின்னப்பட்டார்கள்.

ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாதேவ்யை நம :

பத்தாவது அத்யாயம்

சும்ப வதம்

மஹர்ஷி கூறினார்:—பிராணனுக்கு ஸமானமான ஸஹோதரனாகிய நிசும்பன் கொல்லப் பட்டதையும் சேனைகள் நாசமாவதையும் பார்த்து சும்பன் கோப மடைந்து இவ்விதம் கூறினான்.

ஏ துர்க்கே ! துஷ்டையான நீ பலத்தின் கர்வத் தால் கொழுப்படையாதே. மிகவும் ரோஷமுள்ளநீ இதர ஸ்திரீகளின் பலத்தை ஆச்ரயித்து சண்டையிடு கிருயே.

தேவி கூறினாள்:—' இவ்வுலகில் நான் ஒருவளே. இங்கே என்னைவிட இரண்டாவதுயார்? ஏ துஷ்டனே! இவர்கள் எனது ஐச்வர்ய ரூபமானவர்களே. என்னிட மே லயம் அடைவதைப்பார்.' உடனே பிரும்மாணி முதலிய ஸகல தேவிகளும் மஹாதேவியின் சரீரத்தி லேயே லயம்அடைந்து விட்டார்கள். அப்போது அம் பிகை ஒருவளாகவே யிருந்தாள்.

' நான் ஒருவளே. இங்கு எனது ஐச்வரியத்தால் வெகு ரூபங்களோடு இருந்ததை இப்போது ஸம்ஹரி த்து விட்டேன். இப்போது யுத்தத்தில் நான் ஒரு வளாகவே நிற்கின்றேன். நீயும் ஸ்திரமாய் இரு.'

மஹர்ஷி கூறினார் :—அப்போது ஸர்வ தேவர் களும் அசுரர்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே

தேவிக்கும் ஸும்பனுக்கும் மிகவும் குரூரமான யுத்தம் நடந்தது. பாணவர்ஷங்களாலும் கூரான ஆயுதங்களாலும் அப்படியே பயங்கரமான அஸ்திரங்களாலும் இவ்விருவருக்கும் மிகவும் பயங்கரமான சண்டை மறுபடியும் உண்டாயிற்று. அப்போது அம்பிகை விட்ட பயங்கரமான திவ்ய அஸ்திரங்களையெல்லாம் அப்பெரும்அசுரன் அவைகளுக்குத்தகுந்த பரிஹாரங்களால் முறித்து விட்டான். அப்படியே மஹேச்வரியும் அவ்வசுரன் விட்ட திவ்யமான அஸ்திரங்களையெல்லாம் தனது ஹூம்காரத்தாலேயே விளையாட்டாகவே முறித்துவிட்டாள். உடனே அவ்வசுரன் நூற்றுக்கணக்கான பாணங்களால் தேவியை மறைத்து விட்டான். தேவியும் அதிக கோபமடைந்து தனது பாணங்களால் அவனது வில்களை ஒடித்தாள். வில் ஒடிந்ததும் உடனே அவ்வசுரன் சக்தியென்னும் ஆயுதத்தை யெடுத்துக் கொண்டான். தேவியானவள் அவன் கையிலிருந்த அதையும் சக்கிரத்தினுல் அறுத்து விட்டாள். அசுரர்களின் ராஜாதிராஜனுகிய அவன் கத்தியையும் பிரகாசமுள்ள சதசந்திரமென்னும் ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு வேகமாய் தேவியை நோக்கி ஓடி வந்தான். அவன் ஓடிவரும்போதே சண்டிகையானவள் அவனது கத்தியைத் தனது வில்லுகளால் விடப்பட்ட கூரானபாணங்களாலும் அவ்விதமே சூரிய கிரணம்போல் பளப்பளப்பான அவனது கவசத்தையும் அறுத்துவிட்டாள். குதிரைகள் கொல்லப்பட்டும் ரதம் ஓட்டுகிறவன் மடிந்தும் வில்கள் ஒடிந்தும் போனவுடன் அவ்வசுரன் அம்பிகையைக் கொல்

அவதற்காக கோரமான முத்கரம் என்னும் ஆயு தத்தை எடுத்துக்கொண்டான்.

அவன் ஓடிவரும் போதே அத்த முத்கரத்தைக் கூரான பாணங்களால் அம்பிகையானவள் அடித்து விட்டாள். ஆனாலும் அவன் அதிவேகத்தோடு அம்பி கையை நோக்கிக் குத்துவதற்காக ஓடிவந்தான். அப் போது தேவியின் மார்பில் அதிவேகமாய்க் குத்தி னன். தேவியும் அவனது மார்பில் தனது கையால் ஓங்கி அடித்தாள். இவ்விதம் அடிக்கப்பட்டதும் அவன் பூமியின் மீது விழுந்து விட்டான்.

அவ்வசுரராஜன் உடனே திடீரென்று எழுந்தி ருந்து தேவியைத் தூக்கிக் கொண்டு ஆகாசத்தில் கிளம்பி விட்டான். ஆதாரமில்லாத அங்கேயும் சண்டி கையானவள் அவனோடு சண்டைசெய்தாள். அவ்வி டத்தில் அவ்வசுர ராஜனும் சண்டிகையும் வெகு பயங் கரமாய்க்கைச்சண்டை செய்தார்கள். அதைப்பார்த்து ஆகாயத்திலுள்ள ஸித்தர்களும் முனிவர்களும் மிக வும் ஆச்சரியப்பட்டார்கள். இப்படி வெகு நேரம் அம் பிகையானவள் அவனோடு கைச்சண்டை செய்துவிட்டு அவனைத் தூக்கி அங்கேயே சுழற்றி பூமியில் எறிந்து விட்டாள். அந்த துஷ்டாத்மாவானவன், பூமியில் விழுந்தும் உடனே வேகமாய் கைமுஷ்டி செய்து கொண்டு அம்பிகையைக் கொல்லுவதற்காக ஓடி வந்தான். ஸகல அசுர ஜனங்களுக்கும் அதிபனுகிய அவன் ஓடி வருவதைப் பார்த்துத் தனது சூலத்தினல் அவனை மார்பில் அடித்துக் கீழே தள்ளிவிட்டாள். தேவியின் சூலத்தின் நுனியால் அடிக்கப்பட்ட அவன்

பிராணனை யிழந்து ஸமுத்திரங்கள் தீவுகள் மலைகள் இவைகளோடு கூடின ஸகலமான பூமியையும் நடுங்கும்படி செய்துகொண்டு பூமியில் விழுந்தான். துராத்மாவாகிய அந்த அசுரன் கொல்லப்பட்டதும் எல்லாம் தெளிவாயிற்று. உலகம் மிகவும் சாந்தியை யடைந்தது. ஆகாசமும் நிர்மலமாயிற்று. கொள்ளிக்கட்டைகளுடன் கூடின உத்பாத மேகங்களும் அப்படியே அணைந்துவிட்டன. அவன்விழுந்ததும் நதிகளும் மார்க்கத்தில் ஓட ஆரம்பித்தன. அவன் கொல்லப்பட்டதும் தேவக் கூட்டங்களெல்லாம் நிறைந்த ஆனந்தம் அடைந்தார்கள். கந்தர்வர்களும் அழகாய்ப் பாடினார்கள். மற்றவர்கள் வாத்தியம் வாசித்தார்கள். அப்ஸர ஸ்திரீகள் கூட்டங் கூட்டமாய் நர்த்தனம் செய்தார்கள். காற்றுகளும் மங்களகரமாய் அடித்தன. ஸூர்யனும் நல்ல காந்தியுடன் பிரகாசிக்க ஆரம்பித்தான். அக்னிகளும் சாந்தமாய் எரிந்தன. திக்குகளும் நல்ல சப்தங்களோடு சாந்தமாயிருந்தன.

பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

உ
ஸ்ரீ :
ஸ்ரீ மஹாதேவ்யை நம :

பதினோராவது அத்யாயம்

நாராயணீ ஸ்துதி

மகர்ஷி கூறினார்:—மஹா தேவியினால் அந்த அஸுரச்ரேஷ்டன் கொல்லப் பட்டதும், இந்திரன் அக்னி முதலியதேவர்களெல்லாம் தங்கள் இஷ்டத்தை யடைந்ததால் மலர்ந்த முகக் காந்தியால் பிரகாசிக்கின்ற திக்குகளை யுடையவர்களாய் அந்த காத்யாயனி தேவியை ஸ்தோத்திரம் செய்தார்கள். சரணமடைந்தவர்களின் பீடையை நிவர்த்தி செய்கிற ஏ தேவி! அனுக்ரஹம் செய்யவேண்டும். ஸமஸ்தமான உலகங்களுக்கும் மாதாவாகிய ஏ தேவி! அனுக்ரஹம் செய்ய வேண்டும். உலகங்களுக்கு ஈச்வரியே! அனுக்ரஹம் செய்யவேண்டும். தேவி! நீ ஸ்தாவர ஜங்கமங்களுக்கு ஈச்வரியாதலால் உலகங்களை ரக்ஷிக்க வேண்டும். நீ பூமிஸ்வரூபமா யிருப்பதால் நீயே இவ்வுலகிற்கு ஆதாரபூதமாயிருக்கின்றாய். பிறரால் கண்டிக்கக்கூடாத வீர்ய முடையவளே! ஜல ஸ்வரூபமா யிருக்கிற உன்னால் உலகமெல்லாம் திருப்தி செய்யப் படுகின்றது. அளவற்ற வீர்யமுள்ள நீ விஷ்ணுவின் சக்தியாயும், உலகிற்கு பீஜமாயும், மேலான மாயையாயும் இருக்கின்றாய். உன்னாலேயே இதெல்லாம் மோஹிக்கப்பட்டிருக்கின்றன. ஏ தேவி! உன்னையே மோக்ஷத்திற்கு ஹேதுவென்று அடைகின்றார்கள். ஏ தேவி! ஸகல

மான வித்தைகளும் உனது பேதங்களே; உலகங்களி லுள்ள ஸ்திரீகளெல்லாம் உனது பேதங்களே. ஒரே தாயாராகிய உன்னாலேயே ஸமஸ்தமும் நிறைந்திருக் கின்றன. மேலான வாக்காகிய வேதமே உன்னை ஸ்தோத்திரம் செய்யும்போது, மற்ற ஸ்துதியென்பது எவ்வளவு மாத்திரம்? ஸகல பிராணிகளிடம் தயாரூப மாயும், ஸ்வர்க்கம் முக்தி இவைகளைக் கொடுக்கின்றவ ளாயும் இருக்கிற உன்னை ஸ்தோத்திரம் செய்யப்படும் பொழுது, மேலான வாக்குகளாய வேதங்கள் உன் ஸ்தோத்திர விஷயத்தில் எவ்வளவு மாத்திரம்? ஸகல ஜனங்களின் ஹிருதயத்தில் புத்திரூபமாய் இருக்கின்ற வளே! ஸ்வர்க்கம் மோக்ஷம் இவைகளைக் கொடுக்கின்ற ஏ தேவி! நாராயணி! உனக்கு நமஸ்காரம். கலை காஷ்டை என்னும் ரூபத்தோடு கால பரிணமத்தைக் கொடுப் பவளே! உலகின் முடிவில் சக்தியுள்ளவளே! நாரா யணி! உனக்கு நமஸ்காரம். ஸர்வ மங்களங்களுக்கும் மங்கள ஸ்வரூப மானவளே! சிவே! ஸகல காரிய ஸித்திகளையும் உண்டாக்குகிறவளே! சரணமான வளே! மூன்று நேத்திர முடையவளே! கௌரி! நாராயணி! உனக்கு நமஸ்காரம். ஸிருஷ்டி ஸ்திதி ஸம் ஹாரங்களுக்கு சக்தியுள்ளவளே! பிராசீனமானவளே! குணங்களுக்கு யிருப்பிட மானவளே! குணமயே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். உன்னைச் சரணமென் றடைந்த ஏழைகளையும் பீடிக்கப்பட்டவர்களையும் காப் பாற்றுவதை முக்கிய கார்யமாய் உடையவளே! ஸகல மானவர்களின் பீடைகளை நிவர்த்தி செய்கிறவளே! தேவி! நாராயணி! உனக்கு நமஸ்காரம். ஹம்ஸங்கள்

கட்டின விமானத்தில் வீற்றிருக்கின்றவளே! பிரம்மாவின் பத்னியானவளே! குசும்பாவஸ்திரம் தரிக்கின்றவளே! ஏ தேவி! நாராயணி! உனக்கு நமஸ்காரம். திரிசூலம் சந்திரன் ஸர்ப்பம் இவைகளைத் தரிப்பவளே! மஹாவிருஷபத்தை வாஹனமாய் உடையவளே! மாஹேச்வரியின் ஸ்வரூபமுள்ளவளே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். மயில் கோழி இவைகளால் சூழப்பட்டவளே! மஹாசக்தியைத் தரிக்கின்றவளே! பரிசுத்தமானவளே! குமாரீ ரூபத்திலிருப்பவளே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். சங்கு சக்கிரம் கதா சார்ங்கம் என்னும் மேலான ஆயுதங்களைத் தாங்கியவளே! வைஷ்ணவியின் ரூபமுள்ளவளே! அனுக்ரஹிக்கவேண்டும். நாராயணி! உனக்கு நமஸ்காரம். உக்ரமான மேலான சக்ரத்தைக் கிரஹிக்கின்றவளே! கோரப்பல்லினால் பூமியைத் தூக்கினவளே! வராஹ ரூப முள்ளவளே! சிவே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். பயங்கரமான நரசிம்ம ரூபத்தால் அசுரர்களைக் கொல்ல முயன்றவளே! மூன்று லோகங்களையும் காப்பாற்றும் சக்தியுள்ள நாராயணி! உனக்கு நமஸ்காரம். கிரீடமுள்ளவளே! பெரும் வஜ்ராயுதத்தையுடையவளே! ஆயிரம் கண்களால் பிரகாசிப்பவளே! விருத்திராசுரனுடைய பிராணங்களை அபஹரித்தவளே! இந்திரரூப முள்ளவளே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். சிவதூதி யென்னும் ஸ்வரூபத்தோடு அசுரர்களின் பெருஞ் சேனைகளை ஸம்ஹரித்தவளே! மகா பலமுள்ளவளே! பயங்கரமான ரூபமுள்ளவளே! சப்தமுள்ளவளே! நாராயணி! உனக்கு

நமஸ்காரம். கோரப் பற்களால் பயங்கரமான முக முள்ளவளே! சிரங்களின் மாலையை ஆபரணமாய் உடையவளே! முண்டனை ஸம்ஹரித்த சாமுண்டே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். ஏ! லக்ஷ்மி! லஜ்ஜா ரூப முள்ளவளே! மகாவித்யே! ச்ரத்தா ரூபமுள்ள வளே! புஷ்டி ரூபிணி! ஸ்வதா ரூபிணி! ஸ்திர மானவளே! மஹாராத்திரி! மஹாவித் வித்யே! நாராயணி! உனக்கு நமஸ்காரம். புத்தி ரூபினி! ஸரஸ்வதி! வரங்கொடுப்பவளே! ஐச்வரியங்களைக் கொடுப்பவளே! பிங்களரூபமானவளே! தாமஸ ரூபமான வளே! நியதிரூபினி! ஏ! ஈச்வரி! நாராயணி! உனக்கு நமஸ்காரம். நீ அருள் புரியவேண்டும். ஸர்வ ஸ்வரூப முள்ளவளே! ஸர்வேச்வரி! ஸர்வசக்திகளோடு கூடிய வளே! துர்க்காதேவி! எம்மை ஸர்வ கஷ்டங்களிலிருந் தும் காப்பாற்று. உனக்கு நமஸ்காரம்.

மூன்று நேத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டதும் மிகவும் சாந்தமானதுமான உனதுமுகம் நம்மைச் சகல பூதங்களிலிருந்தும் காப்பாற்றட்டும். ஏ காத்தியாயனி! உனக்கு நமஸ்காரம். ஏ பத்ரகாளி! ஜ்வாலைகளால் மிக வும் பயங்கரமாயும் மிகவும் உக்ரமாயும் ஸமஸ்த அசு ரர்களையும் நாசம் செய்கிறதாயும் உள்ள உனது திரி சூலமானது எம்மைச் சகலபயங்களிலிருந்தும் காப்பாற் றட்டும். உனக்கு நமஸ்காரம். ஏதேவி! உனது மணி யானது தனது சப்தத்தால் உலகை நிறப்பி அசுரர் களின் தேஜஸ்களை ஸம்ஹரிப்பதால் அது எம்மைப் பாபங்களிலிருந்து பிள்ளைகளைப் போல் காப்பாற்றட் டும். ஏ சண்டிகே! அசுரர்களின் ரக்தம் கொழுப்பு

இந்த சேற்றுல் பூசப்பட்டு உனது கையில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் கத்தியானது எமக்கு க்ஷேமத்தையுண்டாக்கட்டும். நாங்கள் உன்னை நமஸ்கரிக்கின்றோம்.

நீ சந்தோஷமடைந்தால் ஸகல ரோகங்களையும் போக்கடித்து இஷ்டமான ஸகல காமங்களையும் கொடுக்கின்றாய். உன்னை ஆச்ரயித்த மனிதர்களுக்கு ஆபத்து கிடையாது. உன்னை ஆச்ரயித்தவர்கள் ஸகலரும் ஆச்ரமாய் ஆகின்றார்கள். ஏ அம்பிகே! உனது மூர்த்தியை அநேக விதமாய்ச்செய்துகொண்டு தர்மத்திற்கு சத்ருக்களான இந்த மஹா அசுரர்களை நீ இப்போது ஸம்ஹாரம் செய்தது மிகவும் மேலானதே. இதை வேறு யார் செய்வார்? வித்தைகளிலும் சாஸ்திரங்களிலும் விவேகத்திற்கு விளக்குப் போன்ற ஆதிவாக்கியங்களான வேதங்களிலும் உன்னைத் தவிர வேறு யார் இருக்கின்றார்கள்? பெரும் இருட்டுள்ள அஹங்காரமாகிய பள்ளத்தில் உலகத்தை இது மிகவும் மயக்கிவிடுகின்றது. எவ்விடத்தில் ராக்ஷஸர்களும் குரூரமான விஷமுடைய ஸர்ப்பங்களும் இருக்கின்றார்களோ, எவ்விடத்தில் திருடர்களின் ஸேனைகளும் இருக்கின்றனவோ, எந்த ஸம்ஸாரஸாகரத்தின் மத்தியில் காட்டுத் தீயு மிருக்கின்றதோ, அங்கு நீ யிருந்து உலகத்தைக் காப்பாற்றுகின்றாய். நீ விச்வேச்வரியாயிருந்துகொண்டு உலகை ரக்ஷிக்கின்றாய். நீ விச்வ ரூபமாயிருந்துகொண்டு உலகைத் தாங்குகின்றாய். நீ விச்வேசனால் வணங்கக் கூடியவளாயிருக்கின்றாய். விச்வத்திற்கு ஆச்ரயமானவர்களும் உன்னிடம் பக்தியோடு

வணங்குகிறவர்களே. ஏ தேவி! அனுக்கிரஹம் செய்ய வேண்டும். இப்போது அசுரர்களை ஸம்ஹாரம் செய்த மாதிரி எப்போதும் எங்களைச் சத்துரு பயத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும். ஸர்வலோகங்களின் பாபங்களையும் உத்பாதத்தால் உண்டான மஹா கஷ்டங்களையும் சீக்கிரம் சமனம் செய்யவேண்டும். லோகத்தின் பீடைகளை அபஹரிக்கும் ஏ தேவி! நமஸ்கரித்த எங்களுக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும். மூன்று உலகங்களிலும் வஸிக்கின்றவர்களால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவளே! உலகங்களுக்கு ஏற்ற வரங்களைக் கொடுத்தருள வேண்டும்.

தேவீ கூறினாள் :—தேவக் கூட்டங்களே! நான் வரம் கொடுக்கின்றேன். மனதில் இஷ்டப்பட்ட வரங்களைக் கேளுங்கள். உலகங்களுக்கு உபகாரமான அந்த வரங்களைக் கொடுக்கிறேன்.

தேவர்கள் சொன்னார்கள் :— ஸகலமான மூன்று லோகங்களுக்கும் ஈச்வரியே! இவ்விதமாகவே நீ எங்களது சத்துருக்களை யெல்லாம் நாசம் செய்து எப்போதும் எங்களுடைய கஷ்டங்களை யெல்லாம் சமனம் செய்யவேண்டும்.

தேவி சொன்னாள் :—இருபத் தெட்டாவது யுகத்தில் வைவஸ்வத மன்வந்தரம் வந்ததும் சும்பனும் நிசும்பனும் இன்னும் மற்ற அசுரர்களும் உண்டாகப் போகிறார்கள். அப்போது நந்தகோபனுடைய வீட்டில் யசோதையின் கர்ப்பத்தில் நான் உண்டாகி விந்திய பர்வதத்தில் வஸித்துக்கொண்டு அவர்களை நாசம் செய்து விடுகின்றேன். மறுபடியும் மிகவும் குரூரமான

ரூபத்தோடு பூமியில் அவதரித்து வைப்ரசித்த அசுரர்களை வதம் செய்துவிடுகின்றேன். வைப்ரசித்தர்கள் என்னும் அந்த அசுரர்களை நான் தின்னும்போது மாதுளம்பூ போன்றவையாக எனது பற்கள் ஆகப் போகின்றன. ஆகையால் ஸ்வர்க்க லோகத்தில் தேவர்களும் பூலோகத்தில் மனிதர்களும் என்னை ஸ்தோத்திரம் செய்து 'ரக்ததந்திகை' என்றழைக்கப் போகிறார்கள். மறுபடியும் நூறுவருஷம் மழையில்லாமல் ஜலமும் இல்லாதபோது மஹர்ஷிகளெல்லாம் என்னை ஸ்தோத்திரம் செய்யும்போது பூமியில் 'அயோநிஜை'யாய் உண்டாகப் போகிறேன். அப்போது நான் நூறுகண்களால் முனிவர்களைப் பார்க்கப் போவதால் முனிவர்கள் என்னை 'சதாக்ஷீ' (நூறுகண்களை யுடையவள்) என்று சொல்லப் போகிறார்கள். அப்போது நான் எனது சரீரத்திலிருந்துண்டான பிராணன்களைத் தரிக்கச்செய்யும் சாகங்களால் (காய் கீரை முதலியவைகளால்) மழை பெய்யும்வரை பிராணிகள்நிறைந்த ஸகல லோகத்தையும் பரிப்பதால் (போஷிப்பதால்) 'சாகம்பரீ' என்னும் கீர்த்தியை யடையப்போகிறேன். அப்போதே துர்க்கமன் என்னும் மகா அசுரனை வதம் செய்யப்போகிறேன். அதனால் எனதுபெயர் துர்க்கா தேவியென்று பிரஸித்தமாகப் போகின்றது. மறுபடியும் நான் பயங்கரமான ரூபத்தை யெடுத்துக்கொண்டு ஹிமாசலத்தில் முனிவர்களை ரக்ஷிப்பதற்காக ராக்ஷஸர்களை வதம்பண்ணப் போவதால் முனிவர்களெல்லாம் மிகவும் வணக்கத்தோடு என்னை ஸ்தோத்திரம் செய்யப் போகிறார்கள். அப்போது எனக்கு 'பீமாதேவி' என்று

பிரஸித்தமான பெயர் உண்டாகப் போகின்றது. அருணாக்ஷன் என்பவன் மூன்று லோகங்களிலும் அளவற்ற பாதையை யுண்டாக்கும் போது நான் வண்டின் ரூபத்தை யெடுத்துக்கொண்டு மூன்று உலகங்களின் க்ஷேமத்திற்காக அந்த மகா அசுரனை வதம் செய்யப் போகிறேன். அப்போது என்னை உலகெலாம் 'ப்ராமரீ' என்று ஸ்தோத்திரம் செய்யப்போகின்றது. இம் மாதிரி எவ்வெப்போது உலகத்திற்கு அசுரர்களின் பீடை ஏற்படுகின்றதோ அவ்வப்போது நான் அவதரித்து சத்துருக்களை யெல்லாம் ஸம்ஹாரம் செய்கின்றேன்.

பதினோராவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

பன்னிரண்டாவது அத்யாயம்

பலச்ருதி

தேவி கூறினாள்:—தினந்தோறும் எவன் ஸ்திரமான மனதோடு இந்த ஸ்தோத்திரங்களால் என்னை ஸ்தோத்திரம் செய்கிறானோ, அவனுடைய ஸகல கஷ்டங்களையும் நான் போக்கடிக்கிறேன். இதில் ஸந்தேகமில்லை. மதுகைடபன் இவர்களின் நாசத்தையும் மஹிஷாசுர வதத்தையும் அவ்வாறே சும்பன் நிசும்பன் இவர்களின் வதத்தையும் அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் நவமியிலும் ஒரே மனதுடன் எவர்கள் சொல்லுகின்றார்களோ, அப்படியே எனது மாஹாத்ம்யத்தையும் பக்தியுடன் கேட்கின்றார்களோ அவர்களுக்குப் பாபமே கிடையாது; பாபத்திலிருந்துண்டான ஆபத்துகளும் கிடையாது. அவர்களுக்கு ஏழ்மைத்தனமும் கிடையாது; இஷ்டர்களின் பிரிவும் கிடையாது; சத்துருக்களிடமிருந்தும் திருடர்களிடமிருந்தும் ராஜர்களிடமிருந்தும் பயம் கிடையாது. ஆயுதம், அக்னி, ஜலம் இவைகளிலிருந்தும் ஒருகாலும் பயம் உண்டாகாது. ஆகையால் எனது இந்த மாஹாத்மியத்தை எப்போதும் பக்தியுடன் படிக்க வேண்டும்; அப்படியே கேட்க வேண்டும். அது மேலான க்ஷேமத்திற்குக் காரணம். என்னுடைய மாஹாத்மியமானது ஸமஸ்தமான பீடைகளையும்

மூன்று விதமான உத்பாதங்களையும் அம்மைகளையும் நிவர்த்திசெய்யும். தினந்தோறும் இது நன்றாய்ப் படிக்கப்படும் ஸ்தானத்தை நான் ஒருகாலும் விடவே மாட்டேன். அவ்விடத்தில் எனது ஸாந்நித்யம் எப்போதும் இருக்கும். பலிகொடுக்கும்போதும் பூஜையிலும் யாகத்திலும் மஹோத்ஸவத்திலும் எனது சரித்திரம் முழுவதும் படிக்கப்படவேண்டும். கேட்கப்படவும்வேண்டும். அறிந்தோ அறியாமலோ செய்யப்பட்ட பலிபூஜை அக்னிஹோமம் இவைகளை நான் பிரீதியுடன் அங்கீகாரம் பண்ணிக்கொள்ளுகிறேன். வருஷம் ஒருமுறை சரத்காலத்தில் செய்யப்படும் எனது பூஜையில் மனிதன் பக்தி சிரத்தையுடன்கூட எனது மாஹாத்மியத்தைப் பாராயணம் செய்தாலும் கேட்டாலும் எனது அநுக்ரஹத்தால் ஸகல பீடைகளும் நீங்கி தனம் தான்யம் நிறைந்தவனுகின்றான். இதில் ஸந்தேகமில்லை. என்னுடைய இந்த மாஹாத்மியத்தைக் கேட்டவுடன் சுபங்கள் உத்பத்தியாகின்றன. யுத்தங்களில் பராக்ரமம் உண்டாகின்றது. மனிதன் பயமற்றவனுகின்றான். சத்துருக்கள் நாசமடைகின்றார்கள்; மங்களம் உண்டாகின்றது. என்னுடைய மாஹாத்மியத்தைக் கேட்கிறவர்களின் குடும்பம் ஸந்தோஷமடைகின்றது. எல்லா சாந்தி கர்மங்களிலும் அப்படியே துர் ஸ்வப்னம் கண்டபோதும், குரூரமான கிரஹங்களின் பீடைகள் உண்டான போதும் எனது மாஹாத்மியத்தைக் கேட்கவேண்டும். உபஸர்க்கங்களும் அப்படியே குரூரமான கிரஹ பீடைகளும் நிவர்த்தியாகின்றன. மனிதர்கள் கண்ட கெட்ட சொப்பனங்களும்

நல்லவையாகின்றன. பாலக்ரஹங்களால் பீடிக்கப் பட்ட குழந்தைகளுக்கும் சாந்தியை யுண்டாக்கும். மனிதர்களுக்குப் பரஸ்பரம் த்வேஷமுண்டானால் இது ஸ்நேக முண்டாக்கும். ஸகலமான கெட்டவர்களுக்கும் இது பலத்தைக் குறைத்து விடும். படிப்பதினாலேயே ராக்ஷஸர் பூதங்கள் பிசாசுகள் இவைகளை நாசம்செய்து விடும். எனது இந்த மாஹாத்மியமானது எனது ஸந் நிதியையுண்டாக்கும். பசுபுஷ்பம் அர்க்கியம் தூபம் கந் தம் தீபம் உத்தமமான பிராம்மண போஜனம் ஹோ மம் புரோக்ஷணீயம் இவைகளால் இரவும் பகலும் இன் னும் மற்ற அநேக விதமான போகங்களாலும்மேலான தானங்களாலும் வருஷம் முழுவதும் எனக்குண்டா கும் பிரீதியானது, ஒரு தடவை இந்தசரித்திரம்பாரா யணம் செய்து கேட்டால்உண்டாகி விடுகிறது. இதைச் சிரவணம் செய்தால் பாபங்களைப் போக்குகின்றது; அப்படியே ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது. பிராணி களுக்கு ரக்ஷை யுண்டாக்குகிறது. எனது அவதாரங் களையும் யுத்தத்தில் துஷ்ட அசுரர்களை ஸம்ஹரிப்ப தையும் ஒரு தடவை சிரவணம் செய்தால் மனிதர் களுக்கு சத்ருபயம் உண்டாவதில்லை. நீங்கள் செய்த ஸ்தோத்திரங்களும் பிரம்மரிஷிகள் செய்த ஸ்தோத் திரங்களும், பிரம்மா செய்த ஸ்தோத்திரங்களும்நல்ல புத்தியைக் கொடுக்கும். கோரமான காட்டிலும், சூன்ய மான தூர வழியிலும், காட்டுத்தீயால் சூழப்பட்டா லும், சூன்யமான வீட்டில் சத்துருக்களாலாவது திரு டர்களாலாவது சூழப்பட்டாலும், காட்டில் சிங்கம் புலி காட்டுயானை இவைகளால் துரத்தப் பட்டாலும்,

கோபங்கொண்ட அரசனால் கொல்லுவதற்கோ அல்லது அடைப்பதற்கோ கட்டளையிடப் பட்டாலும், பெருங் கடலில் கப்பலிலிருந்து கொண்டு பெருங்காற்றால்சுழற் றப் பட்டாலும், மிகவும் க்ரூரமான சண்டையில் ஆயு தங்கள் விழும்போதும், கோரமான ஸமஸ்த பீடைகளி லும் பெரும்வேதனையால் பீடிக்கப் பட்டாலும், எனது சரிதத்தை ஸ்மரிக்கும் மனிதன் இவ்வித ஸங்கடங்களி லிருந்தும் உடனே விடப்படுகின்றான். எனது சரிதத் தை ஸ்மரிப்பவனுக்கு எனது மஹிமையால் சிங்கம் முதலியவைகளும் திருடர்களும் சத்ருக்களும் தூரத் திலிருந்தே ஓடிவிடுகின்றார்கள்.

மஹர்ஷி கூறினார்:—பயங்கரமான பராக்ரமத்தை யுடைய பகவத்ஸ்வரூபமான சண்டிகா தேவியானவள், தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அங் கேயே மறைந்து விட்டாள். அந்த தேவர்களும் கவலை யற்றவர்களாய் முன்போல் தங்களது அதிகாரங்களைச் செலுத்தினார்கள். அவர்களின் சத்ருக்களெல்லாம் நாச மானதும் யஜ்ஞபாகங்களையும் முன்போல் அடைந்தார் கள். தேவர்களின் சத்ருவான சும்பன் தேவியால் வதம் செய்யப் பட்டதும் அவ்விதமே ஜகத்தை நாசம் செய்யும் அளவற்ற பராக்ரமமுள்ள நிசும்பனும் கொல் லப்பட்டதும் பாக்கியிருந்த அசுரர்களெல்லாம் பாதா ளத்தை யடைந்தார்கள். இவ்விதம் பகவதியான தேவி யானவள் நித்யையாயிருந்த போதிலும் ஸ்தோத் திரம் செய்யப்பட்டு, அரசனே! உலகத்தை ரக்ஷிக்கின் றாள். இவ்வுலகம் அவளால் மோஹிக்கப்படுகின்றது. அவளே உலகத்தை உத்பத்திசெய்கிறாள். அவளை

யாசித்தால் நல்ல ஞானத்தைக் கொடுக்கின்றுள். அவள் ஸந்தோஷமடைந்தால் ஸம்பத்தைத் தருகிருள். ஏ ராஜனே! இந்த பிரம்மாண்டம் ஸகலமும் அவளால் வியாபிக்கப் பட்டிருக்கின்றது. அவளே காலத்தில் மஹாமாரியாயும் சிருஷ்டியாயும் ஆகின்றுள். ஸநாதனமாகிய அவளே காலத்தில் பிராணிக்கு ஸ்திதியைச் செய்கிருள். அவளே மனிதர்களுக்கு நல்லகாலத்தில் வீட்டில் விருத்தியைக் கொடுக்கும் லக்ஷ்மியாகின்றுள். அவளே கெட்ட காலத்தில் ஸகலத்தையும் நாசம்செய்யும் அலக்ஷ்மி யாகிருள். அவளை ஸ்தோத்திரம் செய்து புஷ்பங்களாலும் சந்தனம் தூப தீபங்களாலும் நன்றாய்ப் பூஜித்தால் அவள் ஐச்வரியத்தையும் புத்திரஸந்தானத்தையும் அப்படியே தர்மத்தில் மங்களகரமான புத்தியையும் கொடுகின்றுள்.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாதேவ்யை நம:

பதின்மூன்றுவது அத்தியாயம்

தேவீ வரங்கொடுத்தல்

மஹர்ஷி கூறினார்:— ஹே அரசனே! உத்தமமான இந்த தேவீ மாஹாத்மியம் உனக்குச் சொல்லப் பட்டது. இவ்வுலகத்தைத் தரித்துக் கொண்டிருக்கும் தேவியானவள் இவ்வித மஹிமையுள்ளவள். இவளே வித்யை. விஷ்ணுவின் மாயையாகிய இவளால் நீயும் இந்த வைச்யனும் அப்படியே மற்ற விவேகமுள்ளவர்களும் மோஹிக்கப்படுகின்றார்கள். ஏ மஹாராஜனே! அந்த பரமேச்வரியை நீ சரணம் அடை. அவளை ஆராதித்தால் மனிதர்களுக்குப் போக மோக்ஷங்களைக் கொடுப்பாள்.

மார்க்கண்டேயர் கூறினார்:— ஸுரதன் என்னும் அவ்வரசன் இவ்வாறு அவருடைய வார்த்தையைக் கேட்டு மகா மஹிமையுள்ள தீவிர விரதமுள்ள அந்த ரிஷியை நமஸ்கரித்து அதிக அஹங்காரத்தாலும் ராஜ்யம் அபஹரிக்கப்பட்டதாலும் வெறுப்பையடைந்து அந்த வைச்யனோடு தவம்புரியப் போய்விட்டான். அம்பாளைத் தரிசிப்பதற்காக ஒரு நதியின் மணல் மேட்டையடைந்து அங்கு அவ்விருவரும் மண்ணினால் தேவியின் மூர்த்தியை செய்து வைத்துக்கொண்டு மேலான தேவீஸூக்தத்தை ஜபம் செய்து கொண்டு ஆகாரமில்லாதவர்களாய்ப் புஷ்பம் தூபம் தீபம் அக்

னியில் ஹோமம் தர்ப்பணம் முதலியவைகளால் தேவியைப் பூஜித்தார்கள். அப்போது அவர்கள்' ஆகாரநியமம் உள்ளவர்களாய் அதே மனமுடையவர்களாய் வேறிடத்தில் மனம் சலிக்காதவர்களாய்த் தனது சரீரத்திலிருந்துண்டான ரக்தத்தால் கலக்கப்பட்ட பலியை அம்பாளுக்குக் கொடுத்தார்கள். இவ்விதம் அடக்கப்பட்ட மனதோடு அவர்கள் பூஜிக்கும்போது மூன்று வருஷங்கள் சென்றதும் சண்டிகா தேவியானவள் அவர்களுக்குப் பிரத்யக்ஷமாகி மிகவும் சந்தோஷத்தையடைந்து அனுக்ரஹித்தாள்.

தேவீ சொன்னாள் :—ஏ! அரசனே! ஏ வைச்ய குல நந்தன! உங்களிடம் நான் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். உங்களுக்கு எது இஷ்டமோ அந்த வரங்களைக் கேளுங்கள். அதை நான் ஸந்தோஷத்தோடு கொடுக்கின்றேன்.

மார்க்கண்டேயர் கூறினார் :— பிறகு ராஜன் உடனே சத்துருக்களை ஜயித்துத் தனது ராஜ்யம் வரும் ஜன்மத்திலும் நழுவாமல் தனக்கே கிடைக்க வேண்டுமென்னும் வரங்கேட்டான். பிறகு வைச்யனும் வெருப்புள்ள மனதோடு அஹங்காரம் மமகாரம் இவ்வித ஸங்கங்களை ஒழிக்கக்கூடிய சிரேஷ்டமான ஞானத்தை வரித்துக் கொண்டான்.

தேவி கூறினாள் :—ஏ! அரசனே! கொஞ்சம் நாளில் நீ உனது சத்துருக்களைக் கொன்று உனது ராஜ்யத்தை யடைவாயாக. இதில் தடையொன்றும் உண்டாகாது. பிறகு இந்த ஜன்மம் முடிந்ததும் ஸூர்ய தேவனிடமிருந்து'ஜன்மத்தையடைந்து 'ஸாவர்ணிகன்'

என்னும் மநுவாய் நீ உலகில் உண்டாகப் போகிருய். ஏ வைச்யச்ரேஷ்டனே! நீயும் நம்மிடமிருந்து கேட்ட வரங்களை அவ்விதமே கொடுக்கின்றேன். நீ கேட்ட படி உனக்கு சிரேஷ்டமான ஞான ஸித்தி யுண்டாகுக.

மார்க்கண்டேயர் கூறினர் :—தேவியானவள் இவ்விதம் அவர்களுக்கு இஷ்டப்பட்ட வரங்களைக் கொடுத்துவிட்டு அவர்கள் பக்தியுடன் ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கும்போதே அங்கேயே மறைந்து விட்டாள். இவ்விதம் தேவியினிடமிருந்து வரத்தை யடைந்து ஸுரதன் என்னும் க்ஷத்திரியச்ரேஷ்டன் ஸூர்யனிடமிருந்து ஜன்மத்தை யடைந்து ஸாவர்ணி யென்னும் மநுவாய் ஆகப் போகின்ருன். சுபம்.

பதின்மூன்றவது அத்யாயம் முற்றிற்று

தேவீமாஹாத்ம்யம் முற்றிற்று

ஓம் சுபம் மங்களம் சுபம்